**கவனிக்க.-** *2016.06.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1974 - 2016 ජූලි මස 01 වැනි සිකුරාදා - 2016.07.01

*1974 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1002 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1034 |


**கவனிக்க.-** இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம் (SLACD) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | கிரிபாவ | ராஜாங்கனை வம் இவுர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வன்னி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | கொபெய்கனே | பலதொர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தேவமெதி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

7-102

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | ஹங்குரன்கெத்த | நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன் கெத்த நகரப் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

7-103

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவின் ஹட்டன்-டிக்கோயா பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

7-104

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | மகியங்கனை | மகியங்கனை நகரப் பிரிவின் மேலதிக விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

7-105

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆவணி மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 10.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | ஆணமடு | பாண்டிதாபத்து பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தமிழ் ஹத்பத்து பிரிவில் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| புத்தளம் | ஹளாவத | ஹளாவத நகரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

*7-154*

---

## இலங்கை பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவைக்கு பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2016.08.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கை பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

*3.* ***சம்பள அளவுத்திட்டம்.***- ரூபா 3,54,480 - 7 x 3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 ஆந் திகதி முதல் முழுமையான சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) *கடினக் கொடுப்பனவுகள் :* ரூபா 2,000 ;

(ஆ) *இணைந்த கொடுப்பனவுகள் :*

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(இ) வேறு கொடுப்பனவுகள்.- சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(ஈ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸ் சேவையில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய் மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவை ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணிதப் பாடங்கள்

ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா. தரப்) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள் :*

* *உயரம் :* 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* *மார்பு :* 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணி பின்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை***.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்***.- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்) மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை :**

* விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் பொலிஸ் சேவையினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

* உடற்தகுதிப் பரீட்சையில் அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சை இரு வினாத் தாள்களை உள்ளடக்கியது. அவை :

(அ) 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;

(ஆ) பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்).

6. **மருத்துவப் பரிசோதனை**.- விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பயிற்சிநெறியில் சித்தி அடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப் படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் பொலிஸ் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள் செல்லுபடியானதாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

*13.* (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ)விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

*14.* இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ்**

*பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணபதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

   (இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
   (தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

   பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு- மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

   (இ) நிரந்தர முகவரி :-----.

   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

   கிராம அலுவலர் பிரிவு :-----.

   (உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

   (ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

   (ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

   (இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிட வும் :-

   (1) விண்ணப்பதாரர் :-----.
   (2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
   (3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
   (4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.)

   வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) : -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப் பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

    (ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி .................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்).
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :----.
திகதி :-----.

7-241/ 1

---

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2016.08.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கை பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 X 3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்று நிருப இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 ஆந் திகதி முதல் முழுமையான சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு

உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம் தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) *கடினக் கொடுப்பனவுகள் :* ரூபா *2,000* ;

(ஆ) *இணைந்த கொடுப்பனவுகள் :*

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா *10,500* ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா *8,400*.

(இ) வேறு கொடுப்பனவுகள்.- சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(ஈ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமை களைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

*(அ) வயதெல்லை.-* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் *18-28* வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

*(ஆ) கல்வித் தகைமைகள்.-* க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** *1*.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் *41* உம் *44* உம் ஒரு பாடமாகவும், இல. *42*, *45* ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு** *2*.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு** *3*.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள் :*

* *உயரம் :* 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* *மார்பு :* 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) *தொழில் தகைமைகள் :*

*(i)* இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

*(ii)* மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங் காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்து வதற்கு தேவைப்படும் உடல் அவ யங்களின் இயக்கத்திற்கு தடை யாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்திய சாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக் கப்படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில் நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(ஈ) *பார்வை தொடர்பான தேவை.-* ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்த லாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.-* விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.

5. **ஆட்சேர்ப்பு முறை :**

* விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் சேவையினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

* பௌதீகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. **தொழில்சார் பரீட்சை (பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி) :**

6.1 இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்

(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்

(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளி கள்

6.3 *தொழில்சார் பரீட்சை.-* வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவு செய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்** :

* பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியைச் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

10. **பதவியிலமர்த்தும் நியதிகள்**.- இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் *I* ஆம், *II* ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் உரிய திணைக்களப் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி *II* பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ்செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக் களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் *I* ஆம் தொகுதியின் *V* ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதிசெய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் பொலிஸ் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள் செல்லுபடியானதாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" X 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ் களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப் பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத் தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப் படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ்**

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்க வும்) :-----

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிட வும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண் ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் : -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் :-----.

(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி : -----.

(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----. (சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி .................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்).
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :----.
திகதி :-----.

7-241/ 2

## அரச சேவை ஆணைக்குழு

### கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I ஆம் வகுப்பின் வெற்றிடங்கள்

கல்வி அமைச்சின்கீழ் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் கீழ்க்குறிப்பிடப்பட்ட தினங்களில் காணப்படும் இலாங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I ஆம் வகுப்பின் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| திகதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2014.01.01 | 3 |
| 2014.07.01 | 2 |
| மொத்தம் | 5 |

2. இவ்வறிவித்தலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2016.07.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I ஆம் வகுப்பின் வெற்றிடம்" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். சகல விண்ணப்பதாரர்களினாலும் விண்ணப்பப்படிவங்கள் தமது நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். உரிய தினத்திற்கப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அரச சேவையின் நியமனங்களுக்குரியதான பொதுவான நிபந்தனைகளுக்கு மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட அதற்குரியதாக இடைக்கிடையே வெளியிடப் படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவைக்கும், நிதிக் கோவைகளுக்கும் இலக்கம் 1589/ 30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழு சபையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படும்.

3.2 தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் கல்வியியற் கல்லூரி எல்லைக்குள் வசிக்க வேண்டும்.

3.3 பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி சேவையின் தேவைகளுக்கமைய எந்தவொரு கல்வியியற் கல்லூரியிலும் சேவையாற்ற கட்டுப்பட வேண்டும்.

3.4 இவ்வர்த்தமானி அறிவித்தலில் 1 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குரியதான நிபந்தனைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

4. **பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக்குறிப்பின் 17 ஆவது வாசகத்திற்கமைய பட்டம் பெற்றிருப்பது ஆங்கில மொழியிலின்றி இருப்பின் பதவி உயர்விற்காக விண்ணப்பிக்கத் தகைமை பெறும் வகையில் க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்கான திறமைச் சித்தி அல்லது அதனைவிட உயரிய சான்றிதழைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

5. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

5.1 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் 2-I தரத்திற்கு பதவி உயர்வு அமுல்படுத்தப்பட்ட தினம் தொடக்கம் 5 வருட காலங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் ; மற்றும்

5.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வி தொடர்பான முதலாம் வகுப்பின் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது கல்வி தொடர்பான உயரிய பட்டத்தைப் பெற்றிருத்தல்.

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பாக பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அதிஉயரிய திறமைச் சித்தி அல்லது சித்தியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையில் பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்

5.4 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதலாவது அல்லது இரண்டாவது (உயர்) சித்தியுடன் பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறை கற்கை தொடர்பில் பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

6. **சம்பள அளவு :**

6.1 பொது நிர்வாகச் சுற்றிக்கை இலக்கம் 06/ 2006 இற்கமைய SL 1-2006 சம்பள அளவின்கீழ் (ரூபா 22,935-10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 (மாதாந்தம்) சம்பள அளவு உரியதாகும்.

7. **தேர்ந்தெடுக்கும் முறை :**

7.1 அரச சேவை ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை மூலம் அவ்வாணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் புள்ளி ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்படும்.

7.2 நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

7.2.1 பிறப்புச் சான்றிதழ் (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குச் சேகர்த்துக்கொள்ளும் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் அல்லது பௌத்தீஸ்ம சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

7.2.2 பட்டச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமைகள் தொடர்பான ஏனைய சான்றிதழ்கள்

7.2.3 தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள்

7.2.4 சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள உயர் சான்றிதழ்.

7.3 சகல வெற்றிடங்கள் அல்லது ஏதேனும் ஒரு எண்ணிக்கையினை நிரப்புதல் அல்லது நிராப்பாதிருக்கும் உரிமை அரச சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

7.4 அவ்வவ் வெற்றிடங்கள் ஏற்பட்ட தினமன்று அண்மித்த 5 வருட கால சேவைக்காலத்திற்குள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல் மற்றும் சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருப்பதன் மூலம் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.5 நேர்முகப் பரீட்சையின்போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுபவரின் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு.**- எவையேனும் சான்றிதழ் அல்லது பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது.

அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2016, யூன் 10.

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்தில் உத்தியோகத்தர்களை 1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தல்**

1. சேவை அனுபவம் — உயர்ந்தபட்சப் புள்ளி 60
இ. ஆ. க. சே. 2-I தரத்திற்கு பதவி உயர்வுபெற்ற 5 வருடங்களைவிட மேற்பட்ட மேலதிக சேவை காலத்திற்காக ஒரு வருடத்திற்கு 12 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 5 வருடங்களுக்காக புள்ளி வழங்கப்படும்.

2. மேலதிக கல்வித் தகைமைகள் — உயர்ந்தபட்சப் புள்ளி 12
(இ. ஆ. க. சே. 1 ஆம் வகுப்பிற்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உள்ள தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்)

| | | |
|---|---|---|
| 2.1 | கலாநிதிப் பட்டம் (உரிய விடயத்துறை தொடர்பாக) | 12 |
| 2.2 | பட்டப்பின் பட்டம் (உரிய விடயத்துறை தொடர்பாக) | 10 |
| 2.3 | பட்டப்பின் கல்வி டிப்ளோமா (கல்வி அல்லது கல்வி முகாமைத்துவம் அல்லாத) | 05 |

3. ஆங்கில மொழித் தேர்ச்சித் திறமை — உயர்ந்தபட்சப் புள்ளி 06
(1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் 4.1 இன்கீழ் கருத்தில் கொள்வதற்கான தகைமைகளுக்கு மேலதிகமான தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.)

| | | |
|---|---|---|
| 3.1 | பட்டத்திற்கு ஆங்கிலப் பாடமாக/ பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | 06 |
| 3.2 | க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்திற்காக விசேட/ அதிஉயர் திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் | 05 |
| 3.3 | க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழிக்காக திறமைச் சித்தி | 04 |
| 3.4 | க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழிக்காக சாதாரண சித்தி | 03 |
| 3.5 | க. பொ. த. (சா. த.) ஆங்கில மொழிக்காக விசேட/ அதிஉயர் சித்தி | 02 |
| 3.6 | க. பொ. த. (சா. த.) ஆங்கில மொழிக்காக திறமைச் சித்தி | 01 |

4. தொடர்புசாதன இயலுமைகள் — உயர்ந்தபட்சப் புள்ளி 02
இரண்டாவது மொழித் தொடர்பு சாதன இயலுமை

5. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப அறிவு — உயர்ந்தபட்சப் புள்ளி 05
(பல்கலைக்கழகத்தினால் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக் கொண்ட சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி உரித்தாகும்.)

| | | |
|---|---|---|
| 5.1 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக பட்டப் பின் பட்டம் | 05 |
| 5.2 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழூல்நுட்பம் தொடர்பான பட்டம் | 05 |
| 5.3 | பட்டத்திற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | 04 |
| 5.4 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக டிப்ளோமா பாடநெறி (1 வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | 03 |
| 5.5 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (6 மாதங்களைவிட அதிகம்) | 02 |
| 5.6 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக சான்றிதழ் பாடநெறி (6 மாதம் வரை) | 01 |

| | |
|---|---|
| 6. ஆசிரியர் கல்வியின் விருத்திக்குப் பங்களிப்பு | உயர்ந்தபட்சப் புள்ளி 10 |
| 6.1 கல்வியியற் கல்லூரி நிர்வாகத்திற்குரிய சங்கங்கள் மற்றும் குழுக்களில் பதவி வகித்திருத்தல்/ நிறுவனத்தின் அபிவிருத்திக் குரிய வேலைத்திட்டங்களுக்காக சிரமதானங்கள், விழா, கண்காட்சி, செயலமர்விற்கான செயற்பாட்டுப் பங்களிப்பு | 02 |
| 6.2 கல்வியியற் கல்லூரி அபிவிருத்திக்கு மற்றும் கல்விக்குரியதான பல்வேறுபட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தல், தவணை வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சிக்கான பங்களிப்பு | 02 |
| 6.3 கல்வியியற் கல்லூரியின் ஊட்டல் பாடசாலை வேலைத் திட்டங்களை அமுல்படுத்தல் | 02 |
| 6.4 தேசிய கல்வி நிறுவனத்துடன் அமுல்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள்/ பாடவிதான விருத்திக்கான பங்களிப்பு | 02 |
| 6.5 கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர் பதவிகளில் கடமைத் தழுவல்களை மேற்கொள்ளல் (ஒரு வருடத்திற்கு 1/ 2 புள்ளி வீதம்) | 02 |
| 7. கலைசார் செயற்சாதனை (கல்வித் துறைக்குரிய) | உயர்ந்தபட்சப் புள்ளி 05 |
| 7.1 ஆராய்ச்சி மற்றும் ஒப்படைகள் (பட்டம்/ பட்டப்பின் பட்டம்/ பட்டப்பின் பட்ட டிப்ளோமா அல்லது கலாநிதி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஒப்படை இதன்கீழ் உரித் துடையதாகாது.) | 02 |
| 7.2 வெளியீடுகள் (கல்வித்துறை சார்ந்த) | 02 |
| 7.3 கல்வி செயலாளர் அல்லது திணைக்களப் பொறுப்பாளரினால் தாபன விதிக்கோவைக்கமைய முறையான விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்ட சேவை மதிப்பீடுகள் | 03 |
| **மொத்தப் புள்ளிகள்** | 100 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பின் வெற்றிடம்**

(ஏ4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்- திரு./ திருமதி/ செல்வி) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- Rev./Mr./Mrs./ Miss) :----.

(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) சொந்த முகவரி :----.
(iii) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. (i) முதல் நியமனத் திகதி மற்றும் பதவி :----.
(ii) தற்போதைய பதவி மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iii) தற்போதைய சேவை இடம் :----.

5. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தொடர்பாக விபரங்கள் :

(i) முதல் பட்டம் :

| பாடத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ii) பட்டப்பின் பட்டம் :

| பாடத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | அதிவிசேட/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பில் |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்வி டிப்ளோமா :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட நிறுவனம் | பாடநெறிக்குரிய காலம் | அதிவிசேட/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பாக | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) ஏனைய தொழில் தகைமை (டிப்ளோமாச் சான்றிதழ் மற்றும் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் தொடர்பான விபரங்கள்) :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கப்பட்ட நிறுவனம் | பாடநெறியின் காலம் | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| | | |

(v) ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சி :

| க. பொ. த. (சா. த.) | அதிவிசேட/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பாக | பெறுபேறுகள் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |

| *ஆங்கில மொழிக்குரியதாக பெற்றுள்ள உயர் சான்றிதழ்* | *வழங்கப்பட்ட நிறுவனம் மற்றும் செல்லுபடியாகும் திகதி* | *தரம்* |
|---|---|---|
| | | |

(vi) சேவை அனுபவம் மற்றும் சேவை விபரங்கள் (முன்னர் வகித்த பதவி மற்றும் அப்பதவி வகித்த கால எல்லைகள் கால எல்லையுடன் குறிப்பிடுக.) :

| *திணைக்களம்/ நிறுவனம்* | *பதவி* | *நிரந்தர/ தற்காலிக* | *தொடக்கம்* | *வரை* |
|---|---|---|---|---|
| | | | | |

*6.* *6.1* ஏதேனும் தண்டனைக்காக நீதிமன்றத்தில் தாங்கள் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டுள்ளீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

*6.2* தங்களுக்கு எதிராக திணைக்களத்தினால் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதா ? இன்றேல் நீதிமன்றத்தினால் வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றதா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

*6.3* இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட சகல தகவல்களும் எனது அறிவிற்கு எட்டியவகையில் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் நான் இப்பதவியினைப் பெறுவதற்கு தகைமை அற்றவர் எனத் தீர்மானிக்கப்படுவதாகவும் நியமனம் பெற்ற பின்னர் இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னிடம் நட்டஈடு பெறாது பதவி நீக்கம் செய்யப்படும் என்பதனையும் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*7-209*

---

### அரசாங்க சேவை ஆணைக்குழு

சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் தொகுதியில் தரம் III இன்) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கிடையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமனம் செய்கின்ற நேர்முகப் பரீட்சை சபையால் நடாத்தப்படும் கட்டமைவு முறையிலான பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக அதிக புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்தியை வெற்றிடத்தின் பொருட்டு

ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அதன்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அனுமதிக்கின்ற இலக்கம் (இலக்கம் 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் பிரகாரம் கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

**2. தேவையான தகைமைகள் :**

(i) கல்வி/ தொழில்சார் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) அனுபவம்.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு (03) குறையாத செயலூக்கமிக்க தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உடற்றகைமை.- எல்லா பரீட்சார்த்திகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் உள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏனையவை :

* இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்களை கோருகின்ற இறுதித் திகதியில் பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான தகைமைளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) இப்பதவி நிரந்தரமானதாகும் ;

(ii) நியமனம் 03 ஆண்டு காலம் தகுதிகாண் காலத்திற்கு அமைவானதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதற்கு அமைந்தொழுகும் சுற்றுநிருபங்களின்படி பதவியில் நியமனம் பெற்று 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் அரச கரும மொழிகள் தொடர்பான தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிறைவேற்று அலுவலர் தொகுதிக்கான (சட்ட அலுவலர் பதவிக்கு) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அவற்றுக்கு இதனகத்துப் பின்னர் மேற்கொள்கின்ற திருத்தங்கள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றுக்கும் உட்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா 1,10,895 ஆன மாதச் சம்பள அளவுத் திட்டம் உரித்துடையதாகும் (2016.02.25 ஆந் திகதிய அ.நி.சு இலக்கம் 03/2016 இல் இலக்கம் SL-1-2016 சம்பளத் தொகுதியாகும். இந்தச் சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.)

| | | |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டுக்கு உரிய சம்பளம் | : | அடிப்படைச் சம்பளம் - ரூபா 27,871 |
| | : | சீராக்கல் படி - ரூபா 9,651 |

6. கட்டமைவு முறையிலான பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல் | | |
| | – முதல் வகுப்பு சித்திக்காக | 15 | |
| | – இரண்டாம் வகுப்பின் உயர் தரச் சித்திக்காக | 10 | |
| | – இரண்டாம் வகுப்பின் கீழ் தரச் சித்திக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டின் முதலாவது வகுப்பின் சித்திக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பு சித்திக்காக | 10 | |
| | **குறிப்பு**.– சிறப்பு சித்தியுடன் இறுதி பரீட்சை சித்தியடைந்திருந்தால் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். (ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். – பட்டப்படிப்பு அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மட்டும்.) | | |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் உரிய துறை தொடர்பாக ஓராண்டுக்கு குறையாத பட்ட நிலை பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்ட நிலை பின் படிப்பு சட்ட டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 05 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தால் வழங்கப்படும் உரிய துறை தொடர்பாக ஆறு மாதங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தால் வழங்கப்படும் உரிய துறை தொடர்பாக மூன்று மாதங்களுக்கு குறையாத சான்றிதழ் பாடநெறிக்காக (ஒரு பாடநெறிக்கு 2 புள்ளிகள் வீதம்) | | |
| 3. | மேலதிக அனுபவம் | | 30 |
| | சட்டத்தரணியாக அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் – 06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஓராண்டுக்கு குறைந்த – 02 புள்ளிகள் ஓராண்டுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியதாக 30 புள்ளிகள்) (அடிப்படை தகைமை பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் சட்டத்தரணியாக பணியாற்றிய 03 ஆண்டுகள் தவிர்ந்த) (20 ஆண்டுகளுக்கு குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணியிடம் அல்லது சனாதிபதி சட்டத்தரணியிடம் அல்லது நீதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.) | | |
| 4. | கணினி படிப்பறிவு | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழக பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாக கற்றிருத்தல் | 15 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு அரசாங்கம் அங்கீகரிக்கும் நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் | 10 | |

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | தொடர்பான சான்றிதழ் பாடநெறி | | |
| | - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| 5. | ஆங்கில மொழி தேர்ச்சி | 15 | 15 |
| | ஆங்கில மொழியில் கற்கப்படும் பட்ட நிலை பின் படிப்பு பட்டம்/பட்டம்/ பட்டம் பட்டநிலை பின் படிப்பு சட்ட மாணி பட்டம்/சட்டமாணி பட்டம் (உரிய எல்லா பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் பதில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்காக (ஓராண்டு அல்லது 1500 மணித்தியாலங்கள்) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்காக | | |
| | - 6 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு எல்லா வகையிலும் முழுமையாக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் எல்லா சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளையும் உரியவாறு சான்றுப்படுத்திய பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்** :

(i) விண்ணப்பங்களை 2016.07.25 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான கடதாசியில் முதல் பக்கம் இலக்கம் 01 தொக்கம் 05 வரையிலும், 02 ஆவது பக்கம் இலக்கம் 06 தொடக்கம் 08 வரையிலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்து தமது கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச கல்லூரியில் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் அல்லது ரூபா.47615/- இற்கு மேற்பட்ட மாத திரட்டிய சம்பளத்தை பெறுகின்ற அரசாங்கத்தின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்து தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்தின் படிவத்திற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணமல்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எதுவிதமான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் அறியவருமாயின் உங்களது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல்களை ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் அறிய வருமாயின் அதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளுக்கமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த வர்த்தமானி அறிவிப்பில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய கூற்றுகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு இருப்பின் அப்பொழுது சிங்கள மொழி கூற்று வலுவிலிருத்தல் வேண்டும்.

அரசாங் சேவை ஆணைக்குழுவின் கட்டளை பிரகாரம்,

செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 2,
2016, யுலை 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

............................................ அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- Mr./ Mrs/ Miss) :----.

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களம்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 தொலைபேசி இலக்கம் :

நிலையான :----.

கையடக்க :----.

3 3.1 இனம் : ☐

(சிங்களம் -1, தமிழ் -2 , முஸ்லிம் - 4, ஏனைய - 5)

3.2 பெண்/ஆண் :

பெண் ☐

ஆண் ☐

3.3 விவாகமான/விவாகமாகாத :

விவாகமான ☐

விவாகமாகாத ☐

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.5 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

3.6 2016.07.25 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. 4.1 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் வலுவிலிருக்கும் திகதி :----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பட்டம் :----.

4.2 தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

(i) க.பொ.த (சா.த) பரீட்சையில் அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் பெற்றுள்ள சித்தி :----.

(ii) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக பெற்றுள்ள அனுபவம் : ஆண்டுகள் :----.

5. நீங்கள் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்கு நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் திகதி மற்றும் வழக்கு இலக்கத்துடன் முழுமையான விபரங்களைத் தரவும் :----.

6. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்** :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் பொய்யானதெனவோ அல்லது தவறானதெனவோ தெரிவுசெய்வதற்கு முன்னர் அறியவருமாயின், நான் தகைமையற்றவர் என்பதற்கு உட்படுவேன் எனவும், நியமனம் செய்த பின்னர் அறியவருமாயின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றின் அலுவலர், அல்லது ரூபா 47,615 இற்கு மேற்பட்ட அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................ (முழுப் பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், .................................. ஆந் திகதி அவரின் கையொப்பம் எனது முன்னிலையில் வைக்கப்பட்டதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
(கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் ஒப்பம்)

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்த வேண்டும்.

8. விண்ணப்பதாரி அரச அலுவலராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் .................................... (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், .......................................... ஆந் திகதி அவரின் கையொப்பம் எனது முன்னிலையில் வைக்கப்பட்டதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

அவரது வருகை, வேலை மற்றும் நடத்தை ................................ எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

7-214

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

சட்ட அலுவலர் (நிறைவேற்றுத் தரம் - வகுப்பு III) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சில் காணப்படும் சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்திற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுள், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபைக் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மாத்திரம் இங்கு காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நியமனத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படுவர். அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டமொன்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை (6 ஆம் பிரிவின் கீழுள்ள விபரங்களின்படி) நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்** :

(i) *கல்வி/ தொழில் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்

(ii) *அனுபவம்*.- உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் மூன்று (03) வருடங்களை விடக் குறையாத தொழிற்றகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) *உடல் தகுதி*.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) ஏனைய தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த ஒழுக்கப் பண்புடையவராக இருத்தல் வேணடும்.
* இப்பதவிக்குத் தேவைப்படுத்தப்படும் அனைத்துத் தகைமைளையும் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குப் பொருத்தமான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் ஏதேனும் கொள்கைக் கலந்துரையாடல் தொடர்பில் உடன்படுதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டதாகும். ஆட்சேர்ப்பு முறைமையின் அடிப்படையில் நியமனம் பெற்ற திகதி முதல் மூன்று (03) வருட காலத்துக்குள் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட மொழிக்கு மேலதிமாக ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியினை நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அலுவலகப்பற்றற்ற ஊடகமொன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் யாரேனும் அலுவலர் தேவைப்படுத்தப்படும் அரசகரும மொழித் தேர்ச்சியினை தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரச சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகளின் மூலம் ஆளப்படும் என்பதுடன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்கள் ஏனைய விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு ஏற்புடையதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு SL-1-2016 ஆரம்ப நிலை ரூபா 47,615 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா 1,10,895 என்ற திரட்டிய சம்பளம் உரித்துடையதாகும். (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரமாணங்களின்படி துணை நிரல் II இன் சம்பளம் இதற்கு உரித்துடையது).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் முறையில் புள்ளி வழங்கப்படும் :

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள்<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல்<br>- முதல் வகுப்பு சித்தி<br>- இரண்டாம் வகுப்பு மேல் சித்தி<br>- இரண்டாம் வகுப்பு கீழ் சித்தி<br>சட்டக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சையில் முதலாம் வகுப்பு சித்தி<br>சட்டக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பு சித்தி<br>**குறிப்பு.**- சட்டக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சையில் சிறப்புச் சித்தி (Honours) பெற்றிருப்பின் 10 புள்ளிகள் வழங்கப்படும். (சட்டவியல் பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுடனான உச்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | <br><br><br>20<br>15<br>10<br>15<br>10 | 20 |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள்<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்துக்குக் குறையாத கால அளவினைக் கொண்ட பட்டப் பின் படிப்பு டிப்ளோமா ஒன்று அல்லது சட்டவியல் பட்டப் பின் டிப்ளோமா கற்கை ஒன்று பயின்றிருத்தல்.<br>(ஒவ்வொரு டிப்ளோமா பட்டத்திற்கும் 05 புள்ளிகள் வழங்கப்படும்) | | 15 |

| | *விடயம்* | | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | *அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதங்களுக்குக் குறையாத கால அளவினைக் கொண்ட டிப்ளோமா கற்கை ஒன்று பயின்றிருத்தல்.*<br>*(ஒவ்வொரு டிப்ளோமா பட்டத்திற்கும் 03 புள்ளிகள் வழங்கப்படும்)*<br>*அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கை நெறிக்காக*<br>*(ஒவ்வொரு பாட நெறிக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும்)* | | |
| 3. | மேலதிக அனுபவங்கள்:<br>*அரச துறையில் அல்லது தனியார்த் துறையில் 06 மாதங்களை விட அதிகமான மற்றும் ஒரு வருடத்தினை விட குறைவான அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணியாக இருத்தல்.*<br>*02 புள்ளிகள்*<br>ஒவ்வொரு வருடத்துக்குமான 5 புள்ளிகளிலும் கூடியது 30 புள்ளிகள்<br>*(சட்டத்தரணி ஒருவராக அடிப்படைத் தகைமை பெறுவதற்கு 03 வருடங்களை விடக் குறைந்த அனுபவம்)*<br>*(20 வருடங்களைவிடக் குறையாத சேவை அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).* | | *30* |
| 4. | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு : | | *15* |
| | *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்திற்கான பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பம் பயின்றிருத்தல்.* | *15* | |
| | *அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் 01 வருட காலத்தினை விடக் குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பயின்றிருத்தல் அல்லது 1500 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திருத்தல்.* | *10* | |
| | *1,500 மணித்தியாலங்களைவிடக் குறையாத கால அளவைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்–* | | |
| | *- 6 மாதங்கள் 720 மணித்தியாலங்கள்* | *07* | |
| | *- 3 மாதங்கள் 360 மணித்தியாலங்கள்* | *05* | |
| 5. | மொழி ஆற்றல்: | | *15* |
| | *பட்டப்பின் படிப்பு/பட்டப்படிப்பு/சட்டத்துறையில் பட்டப்பின் படிப்பு/ சட்டமாணி பட்டம்*<br>*(தொடர்புடைய அனைத்து பரீட்சைகளினதும் பரீட்சை வினாக்களுக்கும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்)* | *15* | |
| | *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் ஆங்கில டிப்ளோமா பயின்றிருத்தல்.*<br>*(1 வருட காலம் அல்லது 1500 மணித்தியாலங்கள்)* | *10* | |
| | *பல்கைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியினை பயின்றிருத்தல்.* | | |
| | *- 6 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்* | *07* | |
| | *- 3 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்* | *05* | |
| 6. | நேர்முகப் பரீட்சையின் போதான ஆளுமை வெளிப்படுத்தல் | | *05* |
| 7. | மொத்தப் புள்ளிகள் | | *100* |

7. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல்.**- இவ்வறிவித்தலுக்குப் பூரணமாக இணங்கிச் செல்லும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காகக் கருத்திற்கொள்ளப்படும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பன நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் சாதனங்களில் யாதேனுமொன்று நேர்முகப் பரீட்சயின்போது ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

(i) பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பப்படிவங்களும் "செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, இல. 73/1, காலி வீதி, கொழும்பு 03" என்று முகவரியிடப்பட்டு 2016.07.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர் ஏ-4 அளவினதாய் ஒரு முழுத்தாளினை உபயோகித்து இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரித்த விண்ணப்பத்தினைத் தானே தனது கையெழுத்தினால் நிரப்ப வேண்டும். 1 முதல் 7 வரை விண்ணப்பப் படிவத்தின் முதலாம் பக்கத்தில் வரும் வகையிலும், 8 முதல் 13 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவற்றினை மூன்றாம் பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூபா 22,935 தொகையினைவிடக் குறையாத மாதாந்த வேதனத்தினையுடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்து விட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்களை சமர்ப்பித்தல்.**- விண்ணப்பதாரியொருவர் பொய்யான அல்லது தவறான தகவல்களை வழங்கியுள்ளார் என கண்டுபிடிக்கப்பட்டால் அப்பதவிக்கான அவரது தகைமை நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இவரது தகவல்கள் பொய்யானவை எனக் காணப்படுமிடத்து சேவை நியமங்களின் பிரகாரம் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

10. குறித்த பதவி வெற்றிடத்தினை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவதற்கான உரிமை அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியது.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு.

இல.73/1,காலி வீதி,
கொழும்பு 3,
2016, யூன் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

சட்ட அலுவலர் (நிறைவேற்றுத் தரம் - வகுப்பு III) பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :

   1.1 இறுதியில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   1.3 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்/தமிழில்) :----.

   1.4 நீங்கள் ஏற்கனவே அரச சேவையிலுள்ளவராயின், நீங்கள் அரச சேவைக்குள் வந்த பின்னர் உங்கள் பெயரில் மாற்றம் நிகழ்ந்துள்ளதா? ஆம் எனில், உங்கள் முன்னைய பெயரைக் குறிப்பிடுக :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

   2.1 அரச சேவையிலுள்ளவரெனின், திணைக்களத்தின்/பிரிவின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துகளில்) :----.

   2.2 திணைக்களத்தின்/பிரிவின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   2.4 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.5 தொலைபேசி இல. :----.

   2.6 கையடக்க தொலைபேசி இல. :----.

3. பிறந்த திகதி :

   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-

   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. பால் :

   பெண் -1, ஆண் - 2 ☐

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா/தாரமிழந்தவரா என்பது பற்றி :

   விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2, தாரமிழந்தவர் - 3 ☐

8. கல்வித் தகைமைகள் :

   (அ)

   8.1 சட்டவியல் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

   8.2 பட்டத்தின் பெயர் :----.

   8.3 பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.

   8.4 பொது/விஷேட :----.

   8.5 வகுப்பு :----.

   8.6 மொழி மூலம் :----.

   (ஆ) உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி :----.

9. தொழில் தகைமைகள் :

| பரீட்சை/ டிப்ளோமா | ஆண்டுகள் | பாடங்கள் | சித்தியெய்திய மட்டம் | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் :

| பணிபுரிந்த நிறுவனம் | வகித்த பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

11. ஆங்கில மொழி ஆற்றல் :

11.1 பட்டம் :----.

11.2 டிப்ளோமா :----.

11.3 சான்றிதழ் கற்கை :----.

12. தகவல் தொழில்நுட்ப தகைமைகள் :

12.1 பட்டம் :----.

12.2 டிப்ளோமா :----.

12.3 சான்றிதழ் கற்கை :----.

13. ஏனைய கல்வித் தகைமைகள் (பட்டப்பின் படிப்பு/டிப்ளோமா/ஏனைய மொழித் திறமை) :

| பரீட்சை/ டிப்ளோமா/ ஏனையவை | ஆண்டுகள் | பாடங்கள் | சித்தியெய்திய மட்டம் | நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

14. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப் பட்டுள்ளீரா ? :----.

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகிறேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்கு பின்னர் தெரிய வந்தால் எவ்வித இழப்பீடுகளும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கும் இவ்விண்ணப்பதாரி திரு. /திருமதி/செல்வி .................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும், 2016 .................................. மாதம் .................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பதவி :----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
முகவரி :----.

*திணைக்களத் தலைவரின் சான்றுரை :*

*(தற்போது அரச சேவையிலுள்ளவர்களின் கையொப்பத்தினை திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்).*

*இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. பதவியில் சேவை செய்யும் திரு./ திருமதி/ செல்வி ..................................... உடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமானது என்பதையும், அவருக்கெதிரான எத்தகையதொரு ஒழுக்காற்று விசாரணைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் அவர் உட்பட்டிருக்கவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்.*

----,
*திணைக்களத் தலைவரின் கையொப்பமும்*
*பதவி முத்திரையும்.*

*திகதி :----.*

*7-187*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (I)

*இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்பட உள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*1. ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சை தொடர்பில் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.*

*2. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2016.07.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (I)" என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கட்டணமும் இல்லை. அதன் பின் தோற்றுவதற்கு 200 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு 50 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒட்டி, அதன்மீது கையொப்பமும் திகதியும் இட்டு அந்த முத்திரையை பாவனை யற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.*

*3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை உறுதிசெய்யும் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*

(ii) *செல்லுபடியான கடவுச்சீட்டு.*

*4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்தி களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும், அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு, பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர், "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :-*

(i) *பரீட்சையின் பெயர் ;*
(ii) *பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;*
(iii) *பரீட்சார்த்தியின் முகவரி ;*
(iv) *விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவல கத்தின் பெயரும் பதிவு இலக்கமும் திகதியும்.*

5. **பரீட்சைத் திட்டம்**.- இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்றவாறு.-

(I) *நிதிப் பிரமாணங்கள்.*- கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் தொகுதி I (X ஆம் அத்தியாயம் தவிர)

(II) *தாபன விதிக்கோவை.*- கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, தொகுதி I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள்; அத்துடன்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி I இல் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) *மருத்துவமனை நிர்வாகம்.*- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் -

(i) மருத்துவமனை தொடர்பிலுள்ள பொதுவான விதிகளும் ஒழுங்குவிதிகளும் ;

(ii) மருத்துவமனையை சுத்தமாக வைத்திருத்தல் ;

(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(iv) நோயாளிக்கான பொருத்தமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள் ;

(v) மருந்து உற்பத்தி நிலைய நிர்வாகம் ;

(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(vii) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் கனிஷ்ட ஊழியர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு ;

(viii) மருத்துவமனை தொடர்பில் பொதுவான நிர்வாக நடவடிக்கைகள் ;

(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிர்வாக ஒழுங்குவிதிகள் ;

(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் ;

(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை.

(IV) அரசகரும மொழி வாய்மொழிப் பரீட்சை.- சிங்களம்/ தமிழ் (15 நிமிடங்கள்)

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு -

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல்

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்

(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு –

(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல்

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெறவேண்டும்.

எல். எச். திலகரத்ன,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்ன,
மகரகம.
2016, யூன் 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2016 (I)**

சுட்டெண் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : [ ]
சிங்களம் - S, தமிழ் - T
(பொருத்தமான எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : Mr./Mrs/Miss :-----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) (திரு./ திருமதி/ செல்வி) :-----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

5. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. கடமை புரியும் நிலையமும் விலாசமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

7. கடமை புரியும் நிலையமும் விலாசமும் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

8. (i) தற்போது வகிக்கும் பதவி :-

(ii) நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :-----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/ பாடங்கள் :-

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்பு பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களுக்கோ தோற்றி சித்தியடைந்துள் ளீரா ? :-----.

நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ ஆரோக்கியசாலை நிர்வாகம்/ வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/ சிங்களம்) : அவ்வாறாயின், பரீட்சைச் சுட்டெண்ணையும் திகதியையும் குறிப்பிடுக :

| பாடம் | சுட்டெண் | வருடம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. நீங்கள் பரீட்சைக்கு தோன்றுவது முதற்தடவையா ? :----. பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதுவிடின், ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரைக்கூடு :

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக 200 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும் |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரை களை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரை ஒன்றின்மேல் ஒன்று ஒட்டக்கூடாது.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்து கிறேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ............. ரூபா பெறுமதியான முத்திரை/ முத்திரைகள் செல்லுபடியானவை என்றும் இதற்கு முன்னர் உபயோகிக்கப்படாதவை என்றும் நான் உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

...................................................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்ப மிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ...................................................... ........... எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ............... ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

7-222

## கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான கணினி அறிவைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2016

கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்கள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான வினைத்திறமை தடைகாண் பரீட்சையொன்றும் கணினி ஆற்றலைப் பரீட்சிக்கும் எழுத்துமூலப் பரிசீலிப்பு ஒன்றும் இலங்கைப் பரீட்சைக்ள திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி எனும் நகரங்களில் மட்டும் நடாத்தப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் உரிய இலக்கங்கள் கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே பரீட்சைகள் நடாத்தப்படும். விண்ணப் பப்படிவம் தொடர்பான தலைப்பு, இந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் இலக்கத்தின்படி பூரணப் படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட எவையேனும் நிலையமொன்றிற்காகப் போதிய எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் இல்லாவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்கண்மையிலுள்ள நிலையமொன்றிற்குத் தொடர்பான விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

பிரதேச செயலகம் மற்றும் அது அமைந்துள்ள மாவட்டம் தொடர்பான தகவல்கள் 1 ஆம் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தாம் கோருகின்ற பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம், மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் அவ்வட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சரியாக விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விபரங்களை பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக விண்ணப்பதாரருக்கு ஏற்படுகின்ற எந்தவொரு நட்டம் தொடர்பாகவும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படாததுடன் பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம் குறிப்பிடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துவது தொடர்பாக அவரால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கறுளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப் படுவர்.

(ii) பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப் பட்டுள்ளன. இச்சட்டங்கள் மீறப்படின் அவர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குக் கட்டுப்பட வேண்டி ஏற்படும்.

4. **தகைமைகள்**.- 2010.09.29 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் கிராம அலுவலர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் III ஆம் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

5. பரீட்சை நடைமுறை.- விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| விடயம் | விடய | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் | 01 | 100 | 2 மணி |
| 2. விடயம் தொடர்பான தொழில் அறிவு | 02 | 100 | 2 மணி |
| 3. கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/ 2 மணி |

5.1 **அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் (விடய இலக்கம் 1)**

***அலுவலக முறைகள்***.- கிராம அலுவலர் அலுவலகத்திலும் அரச அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்படும் அடிப்படை அறிவு செயல் ரீதியாகப் பயன்படுத்தப்படும் ஆற்றலைப் பரீட்சித்தல் மற்றும் அரச ஆவணங்களைச் சிறப்பாக புரிந்துகொண்டு தெளிவானதும் சுருக்கப்பட்டதுமான குறிப்புகள் மூலம் தமது கருத்துகளையும்/அவதானிப்புக்களை உறுதியான முறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல் மற்றும் விடயம் தொடர்பானவை பற்றி அறிக்கையொன்றினை வரைபு செய்யும் ஆற்றலும் பரீட்சிக்கப்படும்.

**கணக்கீடு**.- கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுடன் தொடர்பான மற்றும் அரச அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்படும. அடிப்படைக் கணக்கீடுகள் மற்றும் கணக்கு முறைகளும், நிதி நிர்வாக ஏடுகளின் செயற்பாடுகள், வழங்குதல் பற்றிய நடைமுறை பற்றி விளக்கம் மற்றும் அறிவு என்பன எதிர்பார்க்கப்படும்.

I ஆம் பாகம்.- சுருக்க விடைகள், எதிர்பார்க்கப்படும் கேள்விகள் உள்ளடக்கபட்டிருக்கும். கேள்வித்தாளிலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்டு அமைக் கப்பட்ட கட்டுரை வடிவான ஒரு வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.2 **விடயம் சார்ந்த தொழில் அறிவு (விடய இலக்கம் 02)**.- கிராம அலுவலர்கள் தொடர்பான பல்வேறு சட்டங்கள் மற்றும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்.

I ஆம் பாகம்.- குறும்பதில்கள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்ட அமைப்பு ரீதியான கட்டுரை வடிவமைக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.3 **கணினிப் பரிசோதனை (பாட இலக்கம் 03)**.- விண்ணப்பதாரிக்குப் பின்வரும் ஆற்றல்கள் உள்ளனவா எனப் பரீட்சிப்பதே இப்பரிசோதனையின் நோக்கமாகும்:

| | |
|---|---|
| | தகவற் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் WINDOWS பணி செயல்முறைமை கோவை முகாமைத்துவம் |
| சொல்முறை வழிப்படுத் தலைச் செய லாற்றல் (word processing | அடிப்படைத் திறன்கள், திரைக்குப் பரீட்சயமாதல், உரைத் தொகுதிப்பு, உரைப் பகுதிகளை ஒருங்குபடுத்தல், எழுத்துரு வகைகள், துணைப்பந்தி, பந்தி, Tab Settings, உரைப்பகுதியொன்றைத் தேடலும் மீளிடலும் அட்சர மற்றும் இலக்கண அமைப்புக் கோளாறுகள் திரையை சீரமைத்தல், பக்கத்தை அமைத்தல் பதிவுப் பதிப்பு, அட்டவணை அமைப்பு, ஒழுங்கு வரிசையில் அமைத்தல், கோவை முகாமைத்துவம் பதிவு ஒன்றை பல முகவரிகளுக்கு அனுப்பச் செய்தல், Macro பயன்பாடு |
| விரிவுத்தாள் அமைத்தல் (Spread sheet) | அடிப்படைத் திறன்கள் மாதிரிப் படிவ அமைப்பு (formatting), சலாகைகளும் வீச்சுக்களும், புதியவற்றை உட்படுத்தலும் அகற்றுதலும், தரவுகளை ஒழுங்கு வரிசையில் அமைத்தல், வரைபுகளை அமைத்தல். அச்சுப் பதிப்பு, செயல் முறை, Macro பயன்பாடு, கோவை முகாமைத்துவம் |
| தரவுத்தளம் (Data base) | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், தரவுத்தளமொன்றை உருவாக்கலும் பயன்படுத்தலும், மாதிரிகள், ஒருங்கி ணைக்கப்பட்ட மாதிரி, popup மாதிரி, தொடர்பாடல் மற்றும் செய்தி சதுரங்கள், பரிசீலனைகள், அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், Macro பயன்பாடு |
| முன்வைப்பு/ படக்குறிப்பு | அடிப்படைத் திறன்கள், பதிப்பு, மாதிரியமைப்பு திட்டம் அமைத்தல், தொடர்புரு, துளையுரு (Erforated), வரைபு முன்வைப்பு (Graphic Representation), Body support and Animation, முன்வைப்புக் கருவிகள் பயன்பாடு, மூலப்பிரதி அமைத்தல் (Master Body), Body Print மற்றும் குறிப்புக்கள் |
| இணையம் | இணையம் பற்றிய அறிமுகம், உலகெங்கும் பரந்திருக்கும் வலை யமைப்பு, Path I இனங்காணும் விதம், நடைமுறை இணையமைப்பு |
| மின்-அஞ்சல் | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சலைப் பெற்றுக்கொள்ளல், மின்னஞ்சலை அனுப்புதல், அதற்குப் பதிலளித்தல், இணைப்புக்களின் உபயோகம் (Attachments), முகவரி களை இனங்காண்பதற்கான குறுவழி கள் (Shortcuts), செய்திகளைப் பெற்றுக் கொள்ளல் |

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டது.

I ஆம் பாகம்.- பல்வகைச் சுருக்க விடைகள், 40 வினாக்களைக் கொண்டது. நேரம் : 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- பாதியளவு அமைப்பு ரீதியான 5 கேள்விகள் இருக்கும். நேரம் : 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- 2010.09.29 ஆந் திகதிய கிராம அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின்

இணைப்பு 2 இன் 8 ஆம் பந்திக்கமைய தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்துக்குச் சமனான அல்லது அதற்கு மேலான தரத்தினைக் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் இக்கணினிப் பரீட்சையினை சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர். மேலும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிப் பிரயோக உதவியாளர் சான்றிதழினை (NVQ - மட்டம் 3) பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்களும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறலாம்.

6. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படுமென்பதுடன் தொடர்பான சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோன்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையொன்றின் சேவையில் சேர்ந்த அலுவலர்களுக்கும் தாம் கல்வி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. தாம் விருப்பமென்றால் ஒவ்வொரு விடயத்துக்காகவும் வெவ்வேறாக மற்றும் ஒவ்வொன்றும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அலுவலர்கள் தோற்ற முடியும். எவ்வாறெனினும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திலும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளிலும் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது வீதமே (40%) மாவது பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதித் தினம் இவ்வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த நாள் எனக் கருதப்படும்.

8. பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் என்னிடம் வெளியிடப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. விண்ணணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுடன் தொடர்பான பிரதேச செயலாளர் ஊடாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய விதமாகப் **பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,** த. பெ. இல. 1503, கொழும்பு எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தொடர்பான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் சமுகமளிக்கும் எல்லாப் பாடங்களின்போதும் பரீட்சை மண்டப அதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும், தமது கையெப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதிப்பத்திரத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

11. **விண்ணப்பங்கள்.**- மாதிரி விண்ணப்பத்தின் இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான பந்திகள் முதலாம் பக்கத்துக்கும், 6 மற்றும் 7 இரண்டாம் பக்கத்துக்கும் உட்படக்கூடிய விதமாக A4 அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சுப் பொறியில் தயாரிக்கப்பட முடியுமெனினும், அதனைப் பிழையற்ற முறையிலும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இத்துடனுள்ள மாதிரியின் அமைப்பிலேயே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பம் மட்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதிகளை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப் படுகிறது. மாதிரி விண்ணப்பத்துக்குப் பொருத்தமற்ற மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ள

விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப் பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றவாறு உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரர் கவனித்துக்கொள்ள வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி யொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும்.

12. முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அதிகாரிகளினால் எந்தப் பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. எவ்வாறெனினும் அதன் பின்னர் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றுவதாக இருந்தாலும் அல்லது இரண்டு பாடங்களில் தோற்றுவதாக இருந்தாலும் பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவும், ஒரு பாடத்துக்காக மட்டும் அமர்வதெனின் பரீட்சைக் கட்டணம் 200 ரூபாவும் ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் சேரக்கூடிய விதமாகத் தீவின் எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்தில் விண்ணப்பதாரரின் பெயரிலேயே செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டேனும் இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரை அல்லது பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் பரீட்சைக் காலஅட்டவணையின் பிரதி யொன்றுடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரிப்பாக கருதப்படக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரமின்றிப் பரீட்சைக்கு அமருவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டதும் அதனைப் பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்த லொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினூடாக வெளியிடப்படும்.

பரீட்சைக்கு 5 நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையுடன் விசாரித்தறிதல் வேண்டும். அத்தகைய விசாரிப்பினைச் செய்யும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள் எனின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையது. பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் சில விடயங்களை நிரூபிப்பதற்கென விண்ணப்பதாரியின் வசமிருக்கும் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதி, பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் கடிதத்தினைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை வைத்திருத்தல் உசிதமானது.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்தப்பட மாட்டாது.

15. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அச்சட்ட திட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றிற்கு உட்படுவதற்கு அவருக்கு ஏற்படுவதுடன், இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இவ்விடயத்துடன் தொடர்புடைய எவ்விடயம் பற்றியும் எனது முடிவு இறுதியான முடிவாகும்.

16. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு இருப்பின் சிங்கள உறையே மேலோங்கும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, யூன் 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணினி அறிவினைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2016**

EFFICIENCY BAR EXAMINATION AND A WRITTEN TEST IN COMPUTER SKILLS FOR THE OFFICERS IN CLASS III OF GRAMA NILADHARI SERVICE - 2016

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

தொடர்பான இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும். (இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம் தெரிவு | 1 | |
| இரண்டாம் தெரிவு | 2 | |

(வர்த்தமானி அறிவித்தலின் 2 பந்தியின் படி தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர் பார்க்கும் நகரங்களை விருப்புரிமை வரிசைப்படி குறிப்பிடுக.)
(இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1. 1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 உரிய மாவட்டமும் மாவட்ட இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்ட படி) :----.

2.3 உரிய பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச செயலாளர் இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்டபடி) :----.

2.4 உரிய மாவட்டமும் பிரதேச செயலாளர் பிரிவும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.2 பால்- பெண்/ ஆண் :
ஆண் - 0
பெண் - 1
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு மாதம் திகதி

4. தாங்கள் இம்முறை பரீட்சையில் தோற்றும் விடயம்/ விடயங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியைப் பார்க்கவும்) :

| தொடர் இலக்கம் | விடயம் | பரீட்சை இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

5. 5.1 உரிய தரம் :----.
5.2 பதவி :----.
5.3 தொடர்பான தரத்தில் நியமனம் பெற்ற திகதி :----.
5.4 தொலைபேசி இல. :----.

6. கவனித்தல் வேண்டும்.- வர்த்தமானி அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால்/ உப தபால் அலுவலகத்தினால் விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு அகன்று போகாத விதத்தில் ஒட்டப்படுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால்/ உப தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பணம் ரூபா :----.

7. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு என்றும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல் :**

.......................................... பிரதேச செயலாளர் பிரிவில் .......................................... கிராம அலுவலர் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவர்,

(i) என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,

(iii) அலுவலர்/ பெண் அலுவலர் இப்பரீட்சையில் தோன்றுவதற்குத் தகுதியானவரென்றும்,

(iv) முதலாவது அமர்வு காரணமாக பரீட்சைக் கட்டணத்திலிருந்து அலுவலர் விலக்களிக்கப் படுகின்றார்/குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். (அவசியமற்றவற்றை வெட்டிவிடுக.).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
முகவரி :-----.
திகதி :-----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெல | 1109 | |
| ஹோமகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்கை | 1118 | கொழும்பு |
| மகரகமை | 1121 | |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | 0 1 |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பேவ | 1136 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | |
| கந்தான | 1206 | |
| திவுலபிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவாங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | கம்பஹா |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | 0 2 |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | |
| மில்லனிய | 1318 | களுத்துறை |
| களுத்துறை | 1321 | |
| பேருவல | 1324 | 0 3 |
| தொடங்கொட | 1327 | |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாததும்பர | 2112 | |
| பன்னவல | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | கண்டி |
| ஹலிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | 0 4 |
| யடிநுவர | 2136 | |
| உடநுவர | 2139 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தொலுவ | 2142 | |
| பாதஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கலேவெல | 2203 | |
| தம்புள்ள | 2206 | |
| நாஉள | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யடவத்த | 2215 | மாத்தளை |
| மாத்தளை | 2218 | |
| அம்பகஹ கோரளை | 2221 | 0 5 |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொத்மலை | 2303 | |
| ஹங்குரன்கெத்த | 2306 | |
| வலப்பனை | 2309 | நுவரெலியா |
| நுவரெலியா | 2312 | |
| அம்பகமுவ | 2315 | 0 6 |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | |
| பலபிட்டிய | 3106 | |
| கரந் தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நா கொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | காலி |
| வெலிவிடிய-திவிதுர | 3130 | |
| அம்பலாங்கொடை | 3133 | 0 7 |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத் ஸதர | 3139 | |
| போபே போத்தல | 3142 | |
| அக்மீமன | 3145 | |
| யக்களமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | |
| கோனபீனுவல | 3154 | |
| ஹபரதுவ | 3157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிடபத்தர | 3203 | |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ஸ | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | மாத்தறை |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுப்பிடிய | 3227 | 0 8 |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபலஸ்ஸ | 3318 | அம்பந்தோட்டை |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | 0 9 |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சண்டிலிப்பாய் (வலிகாமம்தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில்(வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | யாழ்ப்பாணம் |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | 1 0 |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மன்னார் | 4203 | |
| மாந்தை மேற்கு | 4206 | மன்னார் |
| மடு | 4209 | |
| நானட்டான் | 4212 | 1 1 |
| முசலி | 4215 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | 1 2 |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | முல்லைத்தீவு |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | 1 3 |
| வெலிஓய | 4418 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | |
| கண்டாவளை | 4506 | கிளிநொச்சி |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | 1 4 |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | மட்டக்களப்பு |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | 1 5 |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தெகியத்த கண்டிய | 5203 | |
| பதியதலாவ | 5206 | |
| மாஓய | 5209 | |
| உகன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | அம்பாறை |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளைச்சேனை | 5233 | 1 6 |
| இறக்காமம் | 5234 | |
| அக்கறைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லிம் | 5254 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிசிறிபுற | 5303 | |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகாமம் | 5318 | திருகோணமலை |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | 17 |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருக்கல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயகபுர | 6118 | |
| நிகவரடிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | குருநாகல் |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | 18 |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | |
| வனாத்தவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | புத்தளம் |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | 19 |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | அநுராதபுரம் |
| நாச்சியதீவு | 7136 | |
| நொச்சியாகம | 7139 | 20 |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| கலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இபலோகம | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| ஹிங்குராங்கொட | 7203 | |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | பொலன்னறுவ |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | 2 1 |
| தமன்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெடிய | 8112 | |
| சொரணாதொட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | பதுளை |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | 2 2 |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பிபில | 8203 | |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | மொனராகல |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | 2 3 |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | இரத்தினபுரி |
| எலபாத்த | 9127 | |
| அயகம | 9130 | 2 4 |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | கேகாலை |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | 2 5 |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

7-82

---

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி பதவியின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016**

இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2016.07.01 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாததும் 30 வயதுக்கு கூடாததுமான இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2016.08.01 ஆகும். சகல விண்ணப்பப்பத்திரங்களும் அத்தினத்திற்கு முன்பு பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் த. பெ. இலக்கம் 1503, திட்டமிடல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கோ கையில் கொண்டு பாரம் கொடுத்தலோ கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக்

கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப்பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்ந்தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். எவ்வாறிருந்தும் குறித்த சகல நகரங்களிலும் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையம் அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

### 1 ஆம் அட்டவணை

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| ***நகரம்*** | ***நகர இலக்கம்*** |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி III ஆம் தரம்.

2. **பதவியின், கடமையின் தன்மை**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத இயக்க ஓட்டச் செயற்பாட்டின் போது புகையிரத என்ஜின் சாரதியின் கடமையின் பொருட்டு விசேடமான தொழில்நுட்ப திறமை அதாவது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும்படி தேசிய தொழில் திறன் மட்டம் 6 இன்கீழ் உள்ளடக்கப்படும் குறித்த தொழில்நுட்ப திறமையை உள்ளடங்கலாக புகையிரத என்ஜினை செயற்படுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும் பேணுகை செய்தலுக்குத் தேவையான போதுமான அடிப்படைத் தேவைகளை மேற்கொள்ளும் சேவைத் தரமாகும்.

3. ***சம்பள அளவுத்திட்டம்***.- புகையிரத என்ஜின் சாரதி தரம் III இற்கான சம்பள அளவுத்திட்டம் ரூபா 16,500- 5 x 240-5 x 280- 10 x 350-10 x 360 ஆகும்.

4. (அ) ***கல்வித் தகைமைகள் :***

(I) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞான விடயத்துடன் 4 விடயங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் ;

உடன்

(II) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானத்துடன் மேலும் ஒரு விஞ்ஞான விடயம் உட்பட சகல விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) ***தொழிற் தகைமைகள்***.- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளில் ஒன்றை அல்லது இரத்மலானை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் அல்லது அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய பயிலுனர்கள் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையின்கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது இரண்டு வருட முழுநேர டீசல் என்ஜின் சம்பந்தமாக பாடநெறியைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். இப்பாடநெறி தேசிய தொழில் திறமை மட்டம் 6 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :

(I) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(II) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(III) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

(இ) ***உடற்தகுதி :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கான சகல உடற்தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக்கூடியளவுக்கு போதுமான உடற்தகுதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு வெளிச்சுவாசத்தின்போது 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) 6/6, 6/6 அளவுள்ள கண் பார்வை பரிசோதனையிலும் தகுதிபெறல் வேண்டும்.

(ஈ) ***வேறு தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

***குறிப்பு.***- விண்ணப்பதாரி இவ்வறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று சகல தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். தராதரங்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி சான்றிதழ் களின் புகைப்படப் பிரதி விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை.**- மேலுள்ள (04) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் விண்ணப்பப்படிவம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை உள்ளடக்கம்** :

(i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்விகளுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படாது.

(iii) *பரீட்சை விடயங்கள் :*

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) *விடய உள்ளடக்கம் :*

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
(*காலம்* : 1 மணித்தியாலம்)
- முழுப்புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும், விவரிக்கும் ஆற்றலையும், சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் பொது அறிவையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித்தாள் அமையப்பெற்றிருக்கும். இது கணிதக் குளறுபாடுகள் பொது அறிவு, சுற்றாடல் சம்பந்தப்பட்ட 50 கேள்விகளை உள்ளடக்கிய பல்வித மற்றும் சுருக்க விடை வழங்கப்படும் அமைப்பைக் கொண்ட கேள்வித்தாளாகும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (*காலம்* : 3 மணித்தியாலம்)
- முழுப்புள்ளி 100 ஆகும்.

டீசல் என்ஜின் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவு மற்றும் இயந்திர உபகரணம் சம்பந்தமான அறிவை அளவிடும் வகையில் நோக்காகக் கொண்டு இக்கேள்வித்தாள் அமைக்கப்பட்டிருக்கும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(v) *தேர்ந்தெடுக்கும் முறை.*- ஒவ்வொரு விடயத்திலும் தகுதி பெறுவதற்காக 40% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவதுடன், இப்பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப புகையிரத என்ஜின் சாரதி III ஆம் வகுப்பின் பதவிக்கு நியமிக்கப்படுவர். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பது மேலுள்ள 6 இல் (iv) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின்படி பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் வரிசைப்படியாகும்.

(vi) *பரீட்சைப் பெறுபேறு.*- வர்த்தமானி அறிவித்தலின் 6 (v) ஆம் பந்தியின்படி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் முழுப்புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை ஒன்று புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படுதல் பரீட்சை ஆணையாளரினால் தபால் மூலம் அல்லது www. results.exams.gov.lk எனும் வலயத் தளத்தினூடாக மேற்கொள்ளப்படும்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவ தற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 6 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 7 இலிருந்து 10 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் 11 இலிருந்து 12 வரையிலான விடயங்களும்
4 ஆம் பக்கத்தில் 13 ஆம் விடயமும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக் கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவாகும். அதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில்/ உப தபால் அலுவலகத்தில் செலுத்த முடியுமாகும். அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(iii) இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் மற்றும் வேறு வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசன முடையதாக இருக்கும்.

(iv) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி - III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016'' எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன்இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(v) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், ரூபா 2,40,360 ஆன அதற்கு கூடிய வருடாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால், மாகாண அரச சேவையின் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(vi) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

(viii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகாவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறா விட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின்

உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் உம்முடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்துடன் விசாரித்தறியுமாறு கேட்கப்படுவதுடன், கொழும்புக்கு வெளியிலான விண்ணப்பதாரியாயின் உமது மேற்குறிப்பிட்ட விடயத்துடன் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்வதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்ட வேண்டுகோள் கடிதத்தினை முன்வைத்தல் மிகவும் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(ix) பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பரீட்சை அனுமதி அட்டையின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முன்வைக்க வேண்டியதுடன், அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(x) இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(xi) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது.

(xii) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

**8. சேவை நிபந்தனை.**- ஆட்சேர்ப்பு செய்யப்படுவது III ஆம் தரத்திற்காகும்.

**9. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.**- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சகலரும் இரு வருட பயிலுனர் காலத்திற்கு (இப்பயிற்சிக் காலம் உச்சளவு 3 வருட காலமாக திருத்தியமைக்க வாய்ப்புள்ளது.) அக்காலத்திற்குள் புகையிரத என்ஜின் சாரதி பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தத்துவ ரீதியிலான அறிவையும், தொழில் பயிற்சியையும் மற்றும் திறமையை மேற்படுத்திக்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும். பயிற்சிக் காலத்திற்குள் அப்பயிலுநர்கள் நியமிக்கப்படும் பகுதியின் மேற்பார்வைக்கும் நிருவாகத்திற்கும் உட்படல் வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 7:2 உப பிரிவில் காணப்படும் வழிகளில் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர் உத்தியோகத்தர் பயிலுனர் பயிற்சி இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாதவிடத்து அப்பயிலுனர் உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்படும்.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன் ஏற்பாட்டின்படி அரச சேவைக்குச் சேர்ந்த மொழியைத் தவிர்ந்த மற்றைய அரச கரும மொழி தேர்ச்சியை 5 வருட காலத்திற்குள் பெறல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சியைப் பெறும் வரையில் மறுக்கப்படும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தாபன செயற்பாட்டு அமைப்பு நியதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும். மற்றும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை வாசித்து நன்றாக புரிந்துகொள்ளவும்.)

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1
பதிவு மூலம் - 2 ☐
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியை பார்க்கவும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

**இலங்கை புகையிரத திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி பதவி - III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை-2016

Open Competitive Examination for Recruitment for The Post of Engine Driver Grade - III Sri Lanka Railway Department - 2016

1. முதலெழுத்துக்கள் கடைசியில் வரும் வகையில் முழுப் பெயர் :–

(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA

(i) சிங்களத்தில்/ தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.
(உதா : GUNAWARDHANA, H. M. S. K.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–

(i) சிங்களத்தில்/ தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.

3. நிரந்தர முகவரி :–

(i) சிங்களத்தில்/ தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/ பெண் தன்மை :—

பெண் - 1
ஆண் - 0 ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. இனத் தொகுதி :
சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலாயர்-6 ☐

(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :

(i) கிராம அலுவலர் பிரிவு :————.
அதன் இலக்கம் : ☐
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
(iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2016.07.01 ஆந் திகதியன்று வயது :–

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. (அ) கல்வித் தராதரம் :

(i) க. பொ. த. (சா. தரம்) :

சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) தொழில் தராதரம் :

| பாடநெறி | வருடம் |
|---|---|
| | |

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் X அடையாளம் இடுக)

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாததால் அல்லது பிழையான முறையில் அல்லது/ உடன் உண்மைக்குப் புறம்பான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் விண்ணபத்தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதையும் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்கான நியமனம் இரத்துச்செய்யப்படும் என்பதையும் நான் நன்றாக அறிவேன். அதனால் ஏற்படும் நஷ்டத்தை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து பதவியிலிருந்து நீக்கப்

படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(இ) 201 .............................. ஆந் திகதி தபால் அலுவலகத்தில்/ உப தபால் அலுவலகத்தில் ரூபா 600 ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட இலக்கம் .. .............................. உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்) |

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க இணங்குகிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரத ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————————.
பதவி :————————.
முகவரி :————————.
திகதி :————————.
(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/ நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ........... .................................. அவர்கள் ............................. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................... ஆந் திகதியிலிருந்து .......................... ஆந் திகதி வரை ....................... ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/ இல்லை. அவரின் வேலை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/ அதிருப்திகரமானது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி - III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாதென தெரிவித்துக் கொள்கிறேன். (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

————————,
திணைக்கள/ நிறுவன தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————————.
பதவி :————————.
முகவரி :————————.
திகதி :————————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலட்சினையைப் பொறிக்கவும்.)

7-50

---

## அரச சேவை ஆணைக்குழு

### கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2015 (2016)

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தில் 409 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிட்ட தினமன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2015 (2016)" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில்

சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2016.07.29.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும் முறை :**

(அ) எழுத்து மூலப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையுடனான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சகல பாடங்களுக்காகவும் 40% அளவு குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளில் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் வாய்மூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளித்தொகை கட்டமைக்கப்பட்ட மற்றும் பிரயோகப் பரீட்சை சபைக்கு வழங்கப்பட மாட்டாது. கட்டமைக்கப்பட்ட மற்றும் பிரயோக நேர்முகப் பரீட்சைக்காக புள்ளி வழங்கும் முறை இவ்வறிவித்தலில் இலக்கம் 9 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட பரீட்சையின் விரிவுரை நடாத்தும் செயன்முறைத்திறன் ஆகிய இரண்டிலும் குறைந்தபட்ச சித்திப் புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளி எண்ணிக்கைக்கமைய கூடுதலாக புள்ளிகளைப் பெறும் தொடருக்கிணங்க வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர். சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளில் ஒருவரைவிடக் கூடுதலாக இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். நியமனம் அமுலாகும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு வெற்றிடத்தை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கும் பாடத்தின் மொழி மூலமே எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டியதுடன் செயன்முறைப் பரீட்சையும் அம்மொழி மூலமே மேற்கொள்ளப்படும்.

(ஆ) திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் வெற்றிட எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களின் புள்ளித் தொடரை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களிலுள்ள 3 பாடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி பல பாடங்களுக்குத் தகைமை பெறும் பட்சத்தில் அவர் தமது விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டுள்ள பாடத் தொடருக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் பாடம் தீர்மானிக்கப்படும்.

| பாடங்கள் | மொழி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| தொழில்சார் பாடங்கள் | சிங்களம் | 61 |
| | தமிழ் | 39 |
| | ஆங்கிலம் | 8 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | சிங்களம் | 44 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | சிங்களம் | 6 |
| தமிழ் மொழி (தாய் மொழி) | தமிழ் | 43 |
| தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | தமிழ் | 6 |
| ஆங்கிலம் | ஆங்கிலம் | 53 |
| | சிங்களம் | 11 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | தமிழ் | 8 |
| | ஆங்கிலம் | 3 |
| | சிங்களம் | 5 |
| நடனம் | தமிழ் | 1 |

| பாடங்கள் | மொழி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| நடனம் (பரதம்) | தமிழ் | 1 |
| சங்கீதம் | சிங்களம் | 4 |
| | தமிழ் | 2 |
| சங்கீதம் (கர்நாடகம்) | தமிழ் | 2 |
| மேலைத்தேய சங்கீதம் | ஆங்கிலம் | 1 |
| சித்திரம் | சிங்களம் | 8 |
| | தமிழ் | 3 |
| நாடகமும் அரங்கியலும் | சிங்களம் | 5 |
| | தமிழ் | 2 |
| தகவல் தொடர்பால் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | 9 |
| ஆரம்பக் கல்வி - தாய் மொழி | சிங்களம் | 4 |
| | தமிழ் | 2 |
| ஆரம்பக் கல்வி - அழகியற் கல்வி | சிங்களம் | 2 |
| | தமிழ் | 2 |
| ஆரம்பக் கல்வி- உடற்கல்வி | சிங்களம் | 3 |
| | தமிழ் | 2 |
| ஆரம்பக் கல்வி - சிறப்புக் கல்வி | தமிழ் | 2 |
| ஆரம்பக் கல்வி - படைப்பாற்றல் திறன் | சிங்களம் | 3 |
| ஆரம்பக் கல்வி - ஆங்கிலம் | ஆங்கிலம் | 3 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப விஞ்ஞானம் | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப கணிதம் | சிங்களம் | 5 |
| | தமிழ் | 2 |
| பௌத்த சமயம் | சிங்களம் | 6 |
| கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் | சிங்களம் | 2 |
| | தமிழ் | 2 |
| இந்து சமயம் | தமிழ் | 2 |
| இஸ்லாம் | தமிழ் | 1 |
| கணிதம் | சிங்களம் | 5 |
| | தமிழ் | 3 |
| | ஆங்கிலம் | 2 |
| உயிரியல் | சிங்களம் | 2 |
| | தமிழ் | 2 |
| | ஆங்கிலம் | 1 |
| இரசாயனவியல் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 1 |
| | ஆங்கிலம் | 2 |
| பௌதீகவியல் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 1 |
| | ஆங்கிலம் | 2 |
| குடியுரிமைக் கல்வி | சிங்களம் | 2 |
| | தமிழ் | 1 |
| நூலகமும் தகவல் கல்வியும் | ஆங்கிலம் | 1 |
| விவசாய விஞ்ஞானம் | சிங்களம் | 2 |
| விசேட கல்வி | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| மனைப் பொருளியல் | சிங்களம் | 1 |
| | தமிழ் | 2 |
| தொழில் முயற்சிக் கல்வி | சிங்களம் | 1 |

**2. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட

சீர்திருத்தங்களுக்கு அமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்னைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் சீாதிருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று வருடங்கள் தகுதிகாண் கால எல்லைக்கு உட்படுவர்.

(iii) ஆசிரியர் கல்வியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று மூன்று (3) வருடங்கள் கடக்க முன்னர் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01 / 2014 மற்றும் அது சார்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய ஏனைய மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை ஐந்து (5) வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் மூன்று (3) வருடங்களில் ஒரு அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) வருடங்களுக்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதைவிட உயர் சித்தியொன்றைப் பெற்றிருப்பின் இணைப்பு மொழியில் சித்திபெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படும். ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைப்பிரமாணத்தின் அட்டவணை 'VIII' இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும். ஆங்கில மொழியில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தருக்கு இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படும்.

(v) அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், காலத்திற்குக் காலம் அரச சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்பின் நிபந்தனைகள் இப்பதவிக்காக உரியதாகும்.

(vi) வதிவிட வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் கல்வியியற் கல்லூரி எல்லைக்குள் வசிக்க வேண்டும். வதிவிட வசதிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் வரையறுக்கப்பட்ட தூரத்திற்குள் வசிக்க அனுமதி வழங்கப்படும். இருப்பினும் கல்வியியற் கல்லூரி எல்லைக்குள் வீட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் அங்கு வசிக்க வேண்டும்.

3. **சம்பள அளவு.**- இப்பதவிக்குரிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 இற்கமைய SL 1-2006 ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 ரூபா (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீரிக்கப்பட்ட நிறுவனத்தினால் உரிய பாடத்துறையில் இரண்டாம் தர (உயர்) வகுப்பு சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் ;

அல்லது

உரிய பாடத்துறையில் கல்விமாணி இரண்டாம் தரம் (உயர்) வகுப்பில் சித்தியுடன் பட்டம் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை.**- விண்ணப்பத்தைக் கோரும் இறுதித் தினமன்று 22 வயதைவிடக் குறையாமலும் 30 வயதைவிட மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை.**- சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கட்டுப்படுதல் வேண்டும். பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல், உள தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ii) திறந்த போட்டிப் பரீட்சைக்காக மூன்று (3) தடவைகளைவிடக் கூடுதலாகத் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது ;

(iii) இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரும் இறுதித் தினத்திற்கு முன்னர் சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள 36 பாடங்களுக்காக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு பரீட்சார்த்திக்கு 03 பாடங்களுக்காக விண்ணப்பிக்க முடிவதுடன் தாம் விண்ணப்பிக்கும் பாடங்கள் மற்றும் அதற்குரிய குறியீட்டு இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும் :

| பாடத்துறை | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| தொழில்சார் பாடங்கள் | 01 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | 02 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | 03 |
| தமிழ் மொழி (தாய் மொழி) | 04 |
| தமிழ் மொழி (இரணடாம் மொழி) | 05 |
| ஆங்கிலம் | 06 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 07 |
| நடனம் | 08 |
| நடனம் (பரதம்) | 09 |
| சங்கீதம் | 10 |
| சங்கீதம் (கர்நாடகம்) | 11 |
| மேலைத்தேய சங்கீதம் | 12 |
| சித்திரம் | 13 |
| நாடகமும் அரங்கியலும் | 14 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 15 |
| ஆரம்பக் கல்வி - தாய் மொழி | 161 |
| ஆரம்பக் கல்வி - அழகியற் கல்வி | 162 |
| ஆரம்பக் கல்வி - உடற்கல்வி | 163 |
| ஆரம்பக் கல்வி - சிறப்புக் கல்வி | 164 |
| ஆரம்பக் கல்வி - படைப்பாற்றல் திறன் | 165 |
| ஆரம்பக் கல்வி - ஆங்கிலம் | 166 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப விஞ்ஞானம் | 167 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப கணிதம் | 168 |
| பௌத்த சமயம் | 17 |
| கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் | 18 |
| இந்து சமயம் | 19 |
| இஸ்லாம் | 20 |
| கணிதம் | 21 |
| உயிரியல் | 22 |
| இரசாயனவியல் | 23 |
| பௌதீகவியல் | 24 |
| குடியுரிமைக் கல்வி | 30 |
| நூலகமும் தகவல் கல்வியும் | 33 |
| விவசாய விஞ்ஞானம் | 34 |
| விசேட கல்வி | 35 |
| மனைப் பொருளியல் | 36 |

**குறிப்பு**.- விண்ணப்பிக்கும் பாடவிதானங்களில் பிரதான பாடங்களில் ஒன்றாகப் பட்டத்தில் தொடர்ந்திருப்பது அத்தியாவசியம் என்பதுடன் பட்டத்திற்காக தொடரும் மொத்தப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று (1/3) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதான பாடமாக இருக்க வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறைமை :**

9.1 எழுத்து மூலப் பரீட்சை

9.1.1 இப் பரீட்சை பரீடசைகள் ஆணையளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

9.1.2 பாடவிதானம்.- 3 பாடங்களின்கீழ் இப்பரீட்சை நடாத்தப்படும். கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை நேர்முகப் பரீட்சைக்காக தகைமை பெறுவது சகல வினாப்பத்திரங்களிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரமாகும் :

(i) பாட இலக்கம் 01.- பொது அறிவும் உளச்சார்பும் - 100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறுபட்ட அமைப்புக்களின் சூழலைப் போன்று எமது சமூகத்தில் காணப்படும் கலாசார, கல்வி, அரசியல் பொருளாதார மற்றும் ஏனைய உரிய காரணிகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்திற்காக புள்ளி விபர மற்றும் வரைபடக் காட்சியில் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரியின் முடிவு மற்றும் மறுமொழிவுகளை பரிசோதிப்பதன் ஊடாக விண்ணப்பதாரியிடம் காணப்படுகின்ற கிரகித்தல் ஆற்றல், நுண்ணறிவு என்பவற்றை மதிப்பீடு செய்வது எதிர்பார்க்கப்படுகின்றது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) பாட இலக்கம் 02.- கிரகித்தலும் விடய ஆய்வும் - 100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

வழங்கப்பட்ட தலைப்பு/ தொனிப்பொருள் ஊடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைச் சமர்ப்பித்தல், கோவைப்படுத்தல் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்தி காண்பிக்கும் தர்க்க ரீதியிலானதும் அறிவினை அளவீடு செய்தல் மற்றும் ஓரளவு சிக்கலான பந்தி, ஆவணங்கள் மற்றும் விஞ்ஞாபனங்களை புரிந்து கொள்வதற்கு அதனிலுள்ள பிரதான கருத்துக்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் சரியாகவும் வெளிப்படுத்துவதற்குப் பரீட்சார்த்திக்குரிய இயலுமைகளை மதிப்பீடு செய்வதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஏதேனும் கேள்விக்குரிய பிரச்சினைகளைத் தீர்க்க பரீட்சார்த்தி எதிர்பார்க்கக்கூடிய முறைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(iii) பாட இலக்கம் 03.- கல்வி மூல தத்துவங்கள் - 100 புள்ளிகள் - 01 மணித்தியாலம்

கல்வித் தத்துவங்கள், கல்வி சமூக விஞ்ஞானம், ஆசிரியர் வகிபாகம், கல்விக் கொள்கை மற்றும் நவீன பிரச்சினைகள், கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், கல்வி மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் வியூகங்கள், கல்வித் தொழில்நுட்பம் மற்றும் கவ்வி ஆராய்ச்சி ஆகிய துறைகளுக்குரியதாக விண்ணப்பதாரியின் அறிவு இதன் மூலம் பரீட்சிக்கப்படும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

9.2 கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை நேர்முகப் பரீட்சை.- எழுத்துமூலப் பரீட்சையின் அவ்வப் பாடங்களுக்காக 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்காக கீழ்க்குறிப்பிட்ட ஒப்பளவுகளின்கீழ் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை பரீட்சை நடாத்தப்படும். (புள்ளி வழங்கும்போது ஒழுங்கு விதிமுறைகள் உப ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.) தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை மேற்கூறப்பட்ட 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது, அவ்வாறு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமாகும்.

பகுதி I : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

| புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியெய்துவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | | |
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையதாகாது |
| 2. ஆசிரியர் தொழிலில் பெற்றுக்கொண்ட அனுபவம் | 15 | |
| 2. ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 | |
| 3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் | 10 | |

**குறிப்பு**.- இவ்வறித்தலில் குறிப்பிட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்வது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற சான்றிதழ் மூலமாயின் அப்பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பெற்றுக்கொண்ட உறுதிப்படுத்தற் சான்றிதழ் நேர்முகப் பரீட்சையில் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பகுதி II : செயன்முறைப் பரீட்சை :

| புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல் | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. விரிவுரை குறிப்புகளைத் தயார் செய்தல் | 25 | 20 |
| 2. சமர்ப்பிப்பு | 25 | |
| 2.1 பிரவேசம் | 04 | |
| 2.2 விரிவுரைத் திட்டமிடலின் விடயங்களைச் சுருக்கமாகச் சமர்ப்பித்தல் | 04 | |
| 2.3 சமர்ப்பிக்கும் விதம் | 08 | |
| 2.4 பாட உள்ளடக்கம் | 05 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 04 | |

கட்டமைக்கப்பட்ட நேர்முப் பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ததாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் செயன்முறைத்திறன் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர். மேற்கூறப்பட்டவாறு கட்டமைக்கப்பட்ட பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் ஏதேனும் எண்ணிக்கையின் செயன்முறைத்திறன் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தகைமை பெறாத போதிலும் அவ்வாறு தகைமை பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரர்கள் மீண்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

10. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஏதேனும் ஒரு மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல வினாக்களுக்கும் ஒரே மொழி மூலம் விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாது ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்படும் நிதி எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

(v) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் மாத்திரமாகும்.

பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படவேண்டியதுடன் 1 தொடக்கம் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தலைப்புக்கள் 2 மற்றும் 3 ஆம் 4 ஆம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத்தின் மூலம் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறியத்தருகிறேன்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைக்கு மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக தீர்மானித்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையில் விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்ற இறுதித் தினம் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பிக்கும் பாடம், குறியீட்டு இலக்கம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் சரியானதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் முழுமையாகப் பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

பரீட்சை விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைத் தினத்திற்குக் குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னர் தமது பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரித கதியில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாக அமையும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் இட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(viii) அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(x) பரீட்சார்த்தியின் ஆளடையாளங்கள்.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

குறிப்பு :

(அ) விண்ணப்பப்படிவத்தோடு எந்தவொரு ஆவணத்தையோ அல்லது பிரதியினையோ இணைக்கக் கூடாது ;
(ஆ) கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(xi) பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்த்தினை இரத்துச்செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்த சந்தர்ப்பம் உள்ளது.

(xii) அரச சேவை/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோத்தரினால் தமது திணைக்களத்தின்/நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரர்களும் தமது கையொப்பத்தினைத் தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கும் உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தினை அரச பாடசாலைப் பொறுப்பாளர்கள்/கோட்டத்தின் கிராமசேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிகள், ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தேரர் அல்லது வேறு சமயத் தலைவர்கள் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

(xiii) பெறுபேறுகளை வெளியிடல்.- எழுத்துமூலப் பரீட்சையில் தகைமை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல் வர்த்தமானி அறிவித்தலில் 9.1.2 ஆம் வாசகத்திற்கமைய செயலாளர், அரச சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளைத் தனிபட்ட ரீதியில் அறிவிக்கப்படும் அல்லது www.exam.results.gov.lk எனும் இணையத்தளம் ஊடாக வெளியிடப்படும்.

(xiv) இவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடுகளற்ற நிலைமைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக் கருத்தில் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
2016, யூன் 10.

**அட்டவணை**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு திறந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஒழுங்கு விதிமுறைகள்**

*(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழைத் தவிர ஏனைய பாடங்களுக்காக)*

**பகுதி I - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

**குறிப்பு.-** *வர்த்தமானி அறிவித்தலில் 4 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள சான்றிதழுக்காக உயர்ந்தபட்சப் புள்ளி எல்லைக்குட்பட்டதாக புள்ளிகள் வழங்கப்படும்.*

**1. மேலதிக கல்வித் தகைமைகள் — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 1.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதனைவிட உயரிய (கல்வி அல்லது உரிய பாடங்கள் தொடர்பாக) | - 10 |
| 1.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - 05 |

**2. ஆசிரியர் தொழிலில் பெற்றுள்ள அனுபவங்கள் — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

*ஆசிரியர் தொழில் திருப்திகரமாக சகல ஆண்டுகளுக்காக 3 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.*

**3. ஆங்கில மொழித் தேர்ச்சி — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10**

| | |
|---|---|
| 3.1 பட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக தொடர்ந்திருத்தல் | - 10 |
| 3.2 பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | - 08 |
| 3.3 க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | - 06 |
| 3.4 க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் | - 04 |
| 3.5 பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 03 |
| 3.6 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சான்றிதழ் பத்திர பாடநெறி | - 02 |
| 3.7 க. பொ. த. (சா. த.) ஆங்கிலப் பாடத்திற்காக விசேட/ அதிஉயரிய சித்தி/ திறமைச் சித்தி | - 01 |

**4. தகவல் தொழில்நுட்ப அறிவு — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10**

| | |
|---|---|
| 4.1 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் | - 10 |
| 4.2 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் | - 08 |
| 4.3 பட்டதிற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | - 06 |
| 4.4 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 04 |
| 4.5 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி (ஆறு மாதங்களைவிட மேற்பட்ட) | - 02 |
| 4.6 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (ஆறு மாதங்கள் வரை) | - 01 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

**பகுதி II - செயன்முறை பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளி 50**

| | |
|---|---|
| 1. பரிசோதனைச் சபையினால் பாடத்துக்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் விரிவுரையை நடாத்துவதற்காக விரிவுரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் | - 25 |
| 2. இக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய உரையை பரிசோதனைச் சபைக்கு முன்னால் நடாத்துதல் | - 25 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு திறந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஒழுங்கு விதிமுறைகள்**

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் பாடங்களுக்காக)

**பகுதி I - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

**குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலில் 4 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள சான்றிதழுக்காக உயர்ந்தபட்ச புள்ளி எல்லைக்குட்பட்ட புள்ளிகள் வழங்கப்படும்.

**1. மேலதிக கல்வித் தகைமைகள்** — **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 1.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதனைவிட உயரிய (கல்வி அல்லது உரிய பாடங்கள் தொடர்பாக) | - 10 |
| 1.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - 03 |
| 1.3 அரச கரும மொழித் திணைக்களத்தின் சிங்களம்/ தமிழ் II மட்டத்தில் சித்தி அல்லது க. பொ. த. (சா. த.) இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடங்களுக்காக திறமைச் சித்தியுடன் அரச கரும மொழித் திணைக்களத்தில் வாய்மூலப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | - 02 |

இதன்கீழ் இரண்டாம் மொழி சிங்களப் பாடத்திற்காக தமிழ் மொழிச் சான்றிதழும், இரண்டாம் மொழி தமிழ் பாடத்திற்காக சிங்கள மொழிச் சான்றிதழுக்காவும் புள்ளி வழங்கப்படும்.)

**2. ஆசிரியர் தொழிலில் பெற்றுள்ள அனுபவங்கள்** — **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

ஆசிரியர் தொழில் திருப்திகரமாக சகல ஆண்டுகளுக்காக 3 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.

**3. ஆங்கில மொழித் தேர்ச்சி** — **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10**

| | |
|---|---|
| 3.1 பட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக தொடர்ந்திருத்தல் | - 10 |
| 3.2 பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | - 08 |
| 3.3 க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | - 06 |
| 3.4 க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் | - 04 |
| 3.5 பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 03 |
| 3.6 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சான்றிதழ் பத்திர பாடநெறி | - 02 |
| 3.7 க. பொ. த. (சா. த.) ஆங்கிலப் பாடத்திற்காக விசேட/ அதிஉயரிய சித்தி/ திறமைச் சித்தி | - 01 |

**4. தகவல் தொழில்நுட்ப அறிவு** — **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10**

| | |
|---|---|
| 4.1 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப் பின் பட்டம் | - 10 |
| 4.2 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் | - 08 |
| 4.3 பட்டத்திற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | - 06 |

4.4 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) - 04
4.5 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி (ஆறு மாதத்தைவிட மேற்பட்ட) - 02
4.6 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (ஆறு மாதங்கள் வரை) - 01

**மொத்தப் புள்ளிகள் - 50**

**பகுதி** II - செயன்முறை பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளி 50

1. பரிசோதனைச் சபையினால் பாடத்துக்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் விரிவுரையை நடாத்துவதற்காக விரிவுரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் - 25

2. இக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய உரையை பரிசோதனைச் சபைக்கு முன்னால் நடாத்துதல் - 25

**மொத்தப் புள்ளிகள் - 50**

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Teacher Educators Service - 2015 (2016)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் குறியீட்டு இலக்கத்தினைக் கீழே குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடவும். (வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 8 இன் வகுதிகளுக்கமைய)

| தொடர் இலக்கம் | பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(**உ-ம்** : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(**உ-ம்** : GUNAWARDENA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 அலுவலகத் தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழில்) :----.

2.6 பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :

ஆண் - 0

பெண் - 1

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. 5.1 இன வகை :

சிங்களவர் - 1

தமிழர் - 2

இந்தியத் தமிழர் - 3

முஸ்லிம் - 4

ஏனையவர் - 5

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

5.2 திருமணமாகாதவர்/ திருமணமானவர் :

திருமணமாகாதவர்-1

திருமணமானவர்-2

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

5.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.4 2016.07.29 ஆந் திகதியன்று வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. கல்வித் தகைமை :

(அ) (i) பட்டம் அல்லது ஏனைய தகைமை பெற்ற திகதி :----.
(செல்லுபடியாகும் திகதி)

(ii) பட்டம்/ ஏனைய தகைமைகள் (பெயர்) :----.

(iii) தொடர்ந்த பிரதான பாடங்கள் :----.

(iv) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(v) வெளிவாரி/ உள்வாரி :----.

(ஆ) (i) பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தியடைந்த திகதி :----.

(ii) தொடர்ந்த பாடங்கள் :----.

(iii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

7. (i) ஆசியராக முதலில் அரச சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(ii) அவ்வாசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ள பாடங்கள் :----.
(iii) தற்போது சேவையாற்றும் கல்வி வலயம் :----.
(iv) 2016.07.29 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

8. (i) ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆண்டு :----.
(ii) தேசிய கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரியின் பெயர் :----.
(iii) ஆசிரியர் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
(iv) பயிற்சி பெற்ற பாடத்துறைகள் :----.
(v) பயிற்சிக்குரிய பாடத்திற்கு ஆசிரியர் நியமனம் பெற்ற திகதி :----.
(vi) அந்நியமனத் திகதி தொடக்கம் 2016.07.29 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

9. தாங்கள் தற்போது வகிக்கும் பதவியின் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

10. தாங்கள் அரச சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமை பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மொழியைக் குறிப்பிடவும் :----.

11. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சரியாக இங்கு ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தாங்கள் வைத்துக்கொள்ளவும்) |

12. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானது என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ............................ மற்றும் .......................... ஆந் திகதி கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுவதாகக் குறிப்பிடுவதுடன் இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவன் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது எனது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும் அல்லது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குகிறேன். நான் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் பொருத்தமற்றவன் எனத் தெரியவரின் பதவியிலிருந்து நீக்கவும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பமிடப்பட்ட ........................................... வதியும் வண./ திரு./ திருமதி/ செல்வி .................................. ஆகிய இவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இங்கு பதிக்கவும்.).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

.................................................... இன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இத்திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ சமயாசமய ................................. என்ற அடிப்படையில் சேவையாற்றுவதாகவும் இப்பதவிக்கு தோந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என அறிவிக்கிறேன்.

----,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களம் :----.
திகதி :----.

7-210/ 1

---

## அரச சேவை ஆணைக்குழு

கல்வி அமைச்சு

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தில் 781 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிட்ட தினமன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016)" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2016.07.29.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும் முறை :**

(அ) எழுத்து மூலப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையுடனான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சகல பாடங்களுக்காகவும் 40% அளவு குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளில் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள், கட்டமைக்கப்பட்ட மற்றும் பிரயோகப் பரீட்சை சபைக்கு வழங்கப்பட மாட்டாது. கட்டமைக்கப்பட்ட மற்றும் பிரயோக நேர்முகப் பரீட்சைக்காக புள்ளி வழங்கும் முறை இவ்வறிவித்தலில் இலக்கம் 9 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட பரீட்சையின் உரை நிகழ்த்தும் செயன்முறைத்திறன் ஆகிய இரண்டிலும் குறைந்தபட்ச சித்திப் புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளி எண்ணிக்கைக்கமைய கூடுதலான புள்ளிகளைப் பெறும் தொடருக்கிணங்க வெற்றிட

எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளில் ஒருவரைவிடக் கூடுதலாக இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். நியமனம் அமுலாகும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு வெற்றிடத்தை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கும் பாடத்தின் மொழி மூலமே எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டியதுடன் செயன்முறைப் பரீட்சையும் அம்மொழி மூலமே மேற்கொள்ளப்படும்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் வெற்றிட எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களின் புள்ளித் தொடரை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களிலுள்ள 3 பாடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி பல பாடங்களுக்குத் தகைமை பெறும் பட்சத்தில் அவர் தமது விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டுள்ள பாடத் தொடருக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் பாடம் தீர்மானிக்கப்படும்.

| பாடங்கள் | மொழி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| தொழில்சார் பாடங்கள் | சிங்களம் | 113 |
| | தமிழ் | 74 |
| | ஆங்கிலம் | 16 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | சிங்களம் | 81 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | சிங்களம் | 10 |
| தமிழ் மொழி (தாய் மொழி) | தமிழ் | 79 |
| தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | தமிழ் | 10 |
| ஆங்கிலம் | ஆங்கிலம் | 98 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | சிங்களம் | 20 |
| | தமிழ் | 15 |
| | ஆங்கிலம் | 5 |
| நடனம் | சிங்களம் | 8 |
| | தமிழ் | 3 |
| நடனம் (பரதம்) | தமிழ் | 2 |
| சங்கீதம் | சிங்களம் | 7 |
| | தமிழ் | 3 |
| சங்கீதம் (கர்நாடகம்) | தமிழ் | 3 |
| மேலைத்தேய சங்கீதம் | ஆங்கிலம் | 2 |
| சித்திரம் | சிங்களம் | 14 |
| | தமிழ் | 7 |
| | ஆங்கிலம் | 2 |
| நாடகமும் அரங்கியலும் | சிங்களம் | 8 |
| | தமிழ் | 5 |
| | ஆங்கிலம் | 1 |
| தகவல் தொடர்பால் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | 16 |
| ஆரம்பக் கல்வி - தாய் மொழி | சிங்களம் | 8 |
| | தமிழ் | 4 |
| ஆரம்பக் கல்வி - அழகியற் கல்வி | சிங்களம் | 3 |
| | தமிழ் | 3 |
| ஆரம்பக் கல்வி- உடற்கல்வி | சிங்களம் | 5 |
| | தமிழ் | 3 |
| ஆரம்பக் கல்வி - சிறப்புக் கல்வி | சிங்களம் | 2 |
| | தமிழ் | 3 |
| ஆரம்பக் கல்வி - படைப்பாற்றல் திறன் | சிங்களம் | 6 |
| | தமிழ் | 2 |

| பாடங்கள் | மொழி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| ஆரம்பக் கல்வி - ஆங்கிலம் | ஆங்கிலம் | 7 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப விஞ்ஞானம் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 2 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப கணிதம் | சிங்களம் | 10 |
| | தமிழ் | 3 |
| பௌத்த சமயம் | சிங்களம் | 10 |
| கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 3 |
| இந்து சமயம் | தமிழ் | 3 |
| இஸ்லாம் | தமிழ் | 2 |
| கணிதம் | சிங்களம் | 8 |
| | தமிழ் | 7 |
| | ஆங்கிலம் | 5 |
| உயிரியல் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 3 |
| | ஆங்கிலம் | 2 |
| இரசாயனவியல் | சிங்களம் | 5 |
| | தமிழ் | 3 |
| | ஆங்கிலம் | 3 |
| பௌதீகவியல் | சிங்களம் | 5 |
| | தமிழ் | 3 |
| | ஆங்கிலம் | 3 |
| இயந்திரவியல் தொழில்நுட்பம் | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| நிர்மாணத்துறைத் தொழில்நுட்பம் | சிங்களம் | 2 |
| | தமிழ் | 1 |
| மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம் | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| நுண்கலை (மட்பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்) | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம் | தமிழ் | 1 |
| குடியுரிமைக் கல்வி | சிங்களம் | 5 |
| | தமிழ் | 2 |
| | ஆங்கிலம் | 1 |
| வரலாறு | சிங்களம் | 1 |
| பூகோளவியல் | சிங்களம் | 2 |
| | தமிழ் | 2 |
| நூலகமும் தகவல் கல்வியும் | சிங்களம் | 1 |
| | தமிழ் | 1 |
| | ஆங்கிலம் | 2 |
| விவசாய விஞ்ஞானம் | சிங்களம் | 3 |
| | தமிழ் | 1 |
| விசேட கல்வி | சிங்களம் | 2 |
| | தமிழ் | 2 |
| மனைப் பொருளியல் | சிங்களம் | 2 |
| | தமிழ் | 4 |
| தொழில் முயற்சிக் கல்வி | சிங்களம் | 3 |

**2. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களுக்கு அமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில்

விதிக்கப்பட்டுள்ள நிபந்னைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருடம் பதில் கடமைக் கால எல்லைக்கு உட்படுவர்.

(iii) ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று மூன்று (3) வருடங்கள் கடக்க முன்னர் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01 / 2014 இன் ஒழுங்கு விதிகள் மற்றும் அது சார்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய ஏனைய மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை ஐந்து (5) வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் மூன்று (3) வருடங்களில் ஒரு அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) வருடங்களுக்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதைவிட உயர் சித்தியொன்றைப் பெற்றிருப்பின் இணைப்பு மொழியில் சித்திபெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படும். ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைப்பிரமாணத்தின் அட்டவணை 'VIII' இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும். ஆங்கில மொழியில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தருக்கு இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படும்.

(v) அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், காலத்திற்குக் காலம் அரச சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை கல்வியியலாளர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்பின் நிபந்தனைகள் இப்பதவிக்காக உரியதாகும்.

(vi) வதிவிட வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் கல்வியியற் கல்லூரி எல்லைக்குள் வசிக்க வேண்டும். வதிவிட வசதிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் வரையறுக்கப்பட்ட தூரத்திற்குள் வசிக்க அனுமதி வழங்கப்படும். இருப்பினும் கல்வியியற் கல்லூரி எல்லைக்குள் வீட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் அங்கு வசிக்க வேண்டும்.

3. **சம்பள அளவு**.- இப்பதவிக்குரிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 இற்கமைய SL - 1- 2006 - ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 ரூபா (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்கள்** :

(I) **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீரிக்கப்பட்ட நிறுவனத்தினால் உரிய பாடத்துறையில் பட்டத்துடன் பட்ட மேற்கல்வி டிப்ளோமாவும் பெற்றிருத்தல் ;

அல்லது

உரிய பாடத்துறையில் கல்விமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் தொடர்பாக அங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள், குறைந்தளவான தகைமைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

### 1. விசேட கல்வி

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட கல்விப் பாடத்துடன் கூடிய பட்டப்பின் பட்டத்துடன் முழுநேர 5 வருடங்கள் உரிய பாடத்துறையில் கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் உரிய பாடத்துறையில் பெற்ற பட்டப்பின்பட்ட டிப்ளோமா அல்லது விசேட கல்வி தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது விசேட சல்வி தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் உரிய பாடத்துறையின் முழு நேர 6 வருடங்கள் கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பான பட்டம் மற்றும் உரிய பாடத்துறையில் முழு நேர 7 வருடங்கள் கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

(iv) விசேட கல்வி தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் முழுநேர 7 வருடங்கள் கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

**2. தகவல் தொழில்நுட்பம்**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பாக முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் மற்றும் உரிய பாடத்துறை தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக்கொண்ட பட்டத்துடன் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பட்டப்பின் பட்ட டிப்ளோமா மற்றும் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பித்தல் தொடர்பில் 5 வருடங்களைவிடக் குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப தேசிய போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழுடன் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிப்பது தொடர்பில் 5 வருடங்களைவிடக் குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(v) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் எந்தவொரு பாடத்துறையின் கீழும் பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாட பட்டப்பின்பட்ட டிப்ளோமாவுடன் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைக் கற்பிப்பது தொடர்பில் 6 வருட கால தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(vi) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிப்பது தொடர்பில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**3. மேலைத்தேய சங்கீதம்**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பாகப் பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் உரிய பாடத்துறையில் தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iii) மேலைத்தேய சங்கீதப் பாடத்துறையில் பெற்றுக்கொண்ட தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் உரிய பயிற்சியின் பின்னர் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iv) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட உரிய பாடம் தொடர்பிலான டிப்ளோமா சான்றிதழ் மற்றும் 10 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(v) கீழ்க்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றில் மேலைத்தேய சங்கீதம் viii ஆம் தரத்தின் செயன்முறை மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(a) Department of Examinations, Sri Lanka
(b) Trinity College of Music, London
(c) Royal School of Music, London
(d) London College of Music
(e) Institute of Western Music and Speech, Colombo

### 4. ஆங்கிலம்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றுடன் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பித்தல் தொடர்பில் பட்டப்பின்பட்ட டிப்ளோமாவுடன் 6 வருட கால கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) ஆங்கிலம் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமாச் சன்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் ஆசிரியர் பயிற்சிக்குப் பின்னர் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 5. உடற்கல்வி

(i) உடற்கல்வி தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொண்ட உடற்கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான டிப்ளோமா மற்றும் உடற்கல்வி, விளையாட்டு தொடர்பான தேசிய டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் பயிற்சிக்குப் பின்னர் 6 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்தவொரு பாடவிதானத்திலேனும் பெறப்பட்ட பட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உடற்கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டத்துடன் 6 வருட உடற்கல்வி கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட பலகலைக்கழகமொன்றில் எந்தவொரு பாட விதானத்திலேனும் பட்டமொன்றுடன் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடம் தொடர்பாக போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்று 6 வருடங்களைவிடக் குறையாத உடற்கல்வி கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 6. தொழில்நுட்பப் பாடங்கள்

(I) நிர்மாணத் தொழில்நுட்பம்
(II) இயந்திரத் தொழில்நுட்பம்
(III) கலைசார் செயற்பாடுகள்
(IV) மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்
(V) மனைப் பொருளியல்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பில் பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) உரிய பாடங்களில் தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 7 வருடங்களை விடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட பட்டம் மற்றும் உரிய பாடம் தொடர்பில் தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 6 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(iv) உரிய பாடம் தொடர்பில் தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் 6 வருடங்களைவிடக் குறையாத உரிய பாடத்தில் கற்பித்தல் அனுபவத்துடன் உரிய பாடத்துறைக்குரியதாக கீழ்க்குறிப்பிடப்படும் ஏதாவதொரு சான்றிதழைப் பெற்றிருத்தல் :

(அ) தொழில்நுட்பம் தொடர்பான உயர் டிப்ளோமா அல்லது தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய சான்றிதழ் ;

(ஆ) தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா அல்லது தொழில்நுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ் ;

(இ) அரசின் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது பல்தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு வருடத்தைவிடக் குறையாத காலத்திற்கான டிப்ளோமாச் சான்றிதழ் ;

(ஈ) சிற்றி அன்ட் கில்ட்ஸ் I,II அல்லது III சான்றிதழ் ;

(உ) NVQ - V மட்டத்திலான தொழில்நுட்பச் சான்றிதழ்.

(II) ***அனுபவம்.-*** விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் மேற்படி 4 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ள அரச அல்லது மாகாண அரச சேவைக்குரிய இலங்கை அதிபர் சேவை அல்லது இலங்கை ஆசிரியர் சேவை அல்லது கல்வி நிர்வாக சேவை நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஐந்து (5) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

5. **வயதெல்லை.-** விண்ணப்பத்தைக் கோரும் இறுதித் தினமன்று 45 வயதைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை.-** சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கட்டுப்படுதல் வேண்டும். பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல், உள தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள் :**

(i) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை அல்லது அரச அல்லது மாகாண அரச சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவை பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் ;

(iii) இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை அல்லது அரச அல்லது மாகாண அரச சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவை பதவியில் அண்மித்த 5 வருடங்களுக்குள் சகல சம்பள ஏற்றங்களையும் குறிப்பிட்ட தினத்தில் உழைத்துப் பெற்றிருப்பதுடன் அக்காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாத உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் ;

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக மூன்று (3) தடவைகளைவிடக் கூடுதலாகத் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது ;

(v) *தகைமை பெறுகின்ற திகதி–* சேவைக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தலை ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரிகள் 4 (I) தொடக்கம் 7 வகுதிகள் வரை குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகள் விண்ணப்பங்கள் முடிவுறும் இறுதித் திகதிக்கு முன் சகல வழிகளிலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மாத்திரமே.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள 37 பாடங்களுக்காக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு பரீட்சார்த்திக்கு 03 பாடங்களுக்காக விண்ணப்பிக்க முடிவதுடன் தாம் விண்ணப்பிக்கும் பாடங்கள் மற்றும் அதற்குரிய குறியீட்டு இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும் :

| *பாடத்துறை* | *குறியீட்டு இலக்கம்* |
|---|---|
| தொழில்சார் பாடங்கள் | 01 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | 02 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | 03 |
| தமிழ் மொழி (தாய் மொழி) | 04 |
| தமிழ் மொழி (இரணடாம் மொழி) | 05 |
| ஆங்கிலம் | 06 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 07 |
| நடனம் | 08 |
| நடனம் (பரதம்) | 09 |
| சங்கீதம் | 10 |
| சங்கீதம் (கர்நாடகம்) | 11 |
| மேலைத்தேய சங்கீதம் | 12 |
| சித்திரம் | 13 |
| நாடகமும் அரங்கியலும் | 14 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 15 |
| ஆரம்பக் கல்வி - தாய் அமாழி | 161 |
| ஆரம்பக் கல்வி - அழகியற் கல்வி | 162 |
| ஆரம்பக் கல்வி - உடற்கல்வி | 163 |
| ஆரம்பக் கல்வி - சிறப்புக் கல்வி | 164 |
| ஆரம்பக் கல்வி - படைப்பாற்றல் திறன் | 165 |
| ஆரம்பக் கல்வி - ஆங்கிலம் | 166 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப விஞ்ஞானம் | 167 |
| ஆரம்பக் கல்வி - ஆரம்ப கணிதம் | 168 |
| பௌத்த சமயம் | 17 |
| கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் | 18 |
| இந்து சமயம் | 19 |
| இஸ்லாம் | 20 |
| கணிதம் | 21 |
| உயிரியல் | 22 |
| இரசாயனவியல் | 23 |
| பௌதீகவியல் | 24 |
| இயந்திரத் தொழில்நுட்பம் | 25 |
| நிர்மாணத் தொழில்நுட்பம் | 26 |
| மின், இலத்திரனியல் தொழில்நுட்பம் | 27 |
| கலைத் தொழில்நுட்பம் (மட்பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்) | 28 |
| நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம் | 29 |
| குடியுரிமைக் கல்வி | 30 |
| வரலாறு | 31 |
| பூகோளவியல் | 32 |
| நூலகமும் தகவல் கல்வியும் | 33 |
| விவசாய விஞ்ஞானம் | 34 |
| விசேட கல்வி | 35 |
| மனைப் பொருளியல் | 36 |
| தொழில் முயற்சிக் கல்வி | 37 |

**குறிப்பு**.- விண்ணப்பிக்கும் பாடத்துறையை பிரதான பாடங்களில் ஒன்றாகப் பட்டத்திற்கு தொடர்ந்திருப்பது அத்தியாவசியம் என்பதுடன் பட்டத்திற்காக தொடரும் மொத்தப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாவது (1/3) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதான பாடமாக இருத்தல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறைமை :**

9.1 எழுத்து மூலப் பரீட்சை

9.1.1 இப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

9.1.2 பாடவிதானம்.- 3 பாடங்களின்கீழ் இப்பரீட்சை நடாத்தப்படும். கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை நேர்முகப் பரீட்சைக்காக தகைமை பெறுவது சகல வினாப்பத்திரங்களிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரமாகும் :

(i) பாட இலக்கம் 01.- பொது அறிவும் உளச்சார்பும் - 100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறுபட்ட அமைப்புக்களின் சூழலைப் போன்று எமது சமூகத்தில் காணப்படும் கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல் பொருளாதார மற்றும் ஏனைய உரிய காரணிகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்திற்காக புள்ளி விபர மற்றும் வரைபடக் காட்சியில் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரியின் முடிவு மற்றும் மறுமொழிவுகளை பரிசோதிப்பதன் ஊடாக விண்ணப்பதாரியிடம் காணப்படுகின்ற கிரகித்தல் ஆற்றல், நுண்ணறிவு என்பவற்றை மதிப்பீடு செய்வது எதிர்பார்க்கப்படுகின்றது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) பாட இலக்கம் 02.- கிரகித்தலும் விடய ஆய்வும் - 100 புள்ளிகள் - 02 மணித்தியாலம்

வழங்கப்பட்ட தலைப்பு/ தொனிப்பொருள் ஊடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைச் சமர்ப்பித்தல், கோவைப்படுத்தல் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்தி காண்பிக்கும் தர்க்க ரீதியிலானதும் கற்பனை சார்ந்ததுமான அறிவினை அளவீடு செய்தல் மற்றும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, ஆவணமொன்ற அல்லது விஞ்ஞாபனப் பத்திரமொன்றைப் புரிந்து கொள்வதற்கும் அதனிலுள்ள பிரதான கருத்துக்களை தமது நடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சரியாகவும் வெளிப்படுத்துவதற்குப் பரீட்சார்த்திக்குரிய இயலுமைகளை மதிப்பீடு செய்வதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஏதேனும் கேள்விக்குரிய பிரச்சினைகளைத் தீர்க்க பரீட்சார்த்தி எதிர்பார்க்கக்கூடிய முறைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(iii) பாட இலக்கம் 03.- கல்வி மூல தத்துவங்கள் - 100 புள்ளிகள் - 01 மணித்தியாலம்

கல்வித் தத்துவங்கள், கல்வி சமூக விஞ்ஞானம், ஆசிரியர் வகிபாகம், கல்விக் கொள்கை மற்றும் நவீன பிரச்சினைகள், கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், கல்வி மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் வியூகங்கள், கல்வித் தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆராய்ச்சி ஆகிய துறைகளுக்குரியதாக விண்ணப்பதாரியின் அறிவு இதன் மூலம் பரீட்சிக்கப்படும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

9.2 கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை நேர்முகப் பரீட்சை.- எழுத்துமூலப் பரீட்சையின் ஒவ்வொரு பாடங்களுக்காகவும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்காக கீழ்க்குறிப்பிட்ட ஒப்பளவுகளின்கீழ் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை பரீட்சை நடாத்தப்படும். (புள்ளி வழங்கும்போது ஒழுங்கு விதிமுறைகள் உப ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.) தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது, அவ்வாறு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமாகும்.

பகுதி I : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

| புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியெய்துவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | | |
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதாகாது |
| 2. ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 | |
| 3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் | 15 | |

**குறிப்பு**.- இவ்வறித்தலில் குறிப்பிட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்வது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற சான்றிதழ் ஆயின் அப்பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகாரிக்கப்பட்ட நிறுவனமாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பெற்றுக்கொண்ட உறுதிப்படுத்தற் சான்றிதழ் நேர்முகப் பரீட்சையில் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பகுதி II : செயன்முறைப் பரீட்சை :

| புள்ளி வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. விரிவுரை குறிப்புகளைத் தயார் செய்தல் | 25 | 20 |
| 2. சமர்ப்பிப்பு | 25 | |
| 2.1 பிரவேசம் | 04 | |
| 2.2 விரிவுரைத் திட்டமிடலின் விடயங்களைச் சுருக்கமாகச் சமர்ப்பித்தல் | 04 | |
| 2.3 சமர்ப்பிக்கும் விதம் | 08 | |
| 2.4 பாட உள்ளடக்கம் | 05 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 04 | |

கட்டமைக்கப்பட்ட நேர்முப் பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ததாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர். மேற்கூறப்பட்டவாறு கட்டமைக்கப்பட்ட பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் ஏதேனும் எண்ணிக்கையின் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தகைமை பெறாத போதிலும் அவ்வாறு தகைமை பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரர்கள் மீண்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

10. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விண்ணப்பிக்கும் ஒரு மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல வினாக்களுக்கும் ஒரே மொழி மூலம் விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாது ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்படும் நிதி எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

(v) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் மாத்திரமாகும்.

பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படவேண்டியதுடன் 1 தொடக்கம் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தலைப்புக்கள் 2 மற்றும் 3 ஆம் 4 ஆம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத்தின் மூலம் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறியத்தருகிறேன்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைக்கு மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக தீர்மானித்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையில் விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்ற இறுதித் தினம் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணபிக்கும் பாடம், குறியீட்டு இலக்கம், விண்ணப்பதாரியின் கையொப்பம், அதிபரின் உறுதிப்படுத்தல் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சான்றிதழுடன் முழுமையாகப் பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

பரீட்சை விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைத் தினத்திற்குக் குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னர் தமது பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரித கதியில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்தாக அமையும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் இட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(viii) அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(x) *பரீட்சார்த்தியின் ஆளடையாளங்கள்.*- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் ஒரு ஆவணத்தை அல்லது பிரதியினை இணைக்கக் கூடாது ;
(ஆ) கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(xi) பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்த்தினை இரத்துச்செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்த சந்தர்ப்பம் உள்ளது.

(xii) அரச சேவை/ மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோத்தரினால் தமது திணைக்களத்தின்/ நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரர்களும் தமது கையொப்பத்தினைத் தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

(xiii) பெறுபேறுகளை வெளியிடல்.- எழுத்துமூலப் பரீட்சையில் தகைமை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியல் வர்த்தமானி அறிவித்தலில் 9.1.2 ஆம் வாசகத்திற்கமைய அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளைத் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படும் அல்லது www.exam.results.gov.lk இணையத்தளம் ஊடாகப் பிரசுரிக்கப்படும்.

(xiv) இவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடுகளற்ற நிலைமைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக் கருத்தில் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
2016, யூன் 10.

**அட்டவணை**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஒழுங்கு விதிமுறைகள்

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழைத் தவிர ஏனைய பாடங்களுக்காக)

**பகுதி I - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

**குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலில் 4 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள சான்றிதழுக்காக உயர்ந்தபட்ச புள்ளி எல்லைக்குட்பட்டதாக புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள்** | **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 20** |
| 1.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதனைவிட உயரிய (கல்வி அல்லது உரிய பாடங்கள் தொடர்பாக) | 12 |
| 1.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா | 08 |

**2. ஆங்கில மொழித் தேர்ச்சி** **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 2.1 பட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக தொடர்ந்திருத்தல் | - 15 |
| 2.2 பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | - 12 |
| 2.3 க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சிததியடைந்திருத்தல் | - 10 |
| 2.4 க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் | - 08 |
| 2.5 பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 06 |
| 2.6 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சான்றிதழ் பத்திர பாடநெறி | - 04 |
| 2.7 க. பொ. த. (சா. த.) ஆங்கிலப் பாடத்திற்காக விசேட/ அதிஉயரிய சித்தி/ திறமைச் சித்தி | - 02 |

**3. தகவல் தொழில்நுட்ப அறிவு** **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 3.1 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் | - 15 |
| 3.2 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் | - 12 |
| 3.3 பட்டத்திற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | - 10 |
| 3.4 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 08 |
| 3.5 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி (ஆறு மாதத்தைவிட மேற்பட்ட) | - 06 |
| 3.6 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (ஆறு மாதங்கள் வரை) | - 04 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

**பகுதி II - செயன்முறை பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

| | |
|---|---|
| 1. பரிசோதனைச் சபையினால் பாடத்துக்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் விரிவுரையை நடாத்துவதற்காக விரிவுரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் | - 25 |
| 2. இக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய உரையை பரிசோதனைச் சபைக்கு முன்னால் நடாத்துதல் | - 25 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஒழுங்கு விதிமுறைகள்**

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் பாடங்களுக்காக)

**பகுதி I - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

**குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலில் 4 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள சான்றிதழுக்காக உயர்ந்தபட்ச புள்ளி எல்லைக்குட்பட்டதாக புள்ளிகள் வழங்கப்படும்.

**1. மேலதிக கல்வித் தகைமைகள்** **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 20**

| | |
|---|---|
| 1.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதனைவிட உயரிய (கல்வி அல்லது உரிய பாடங்கள் தொடர்பாக) | - 10 |
| 1.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - 06 |

| | |
|---|---|
| 1.3 அரச கரும மொழித் திணைக்களத்தின் சிங்களம்/ தமிழ் II மட்டத்தில் சித்தி அல்லது க. பொ. த. (சா. த.) இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடங்களுக்காக திறமைச் சித்தி யுடன் அரச கரும மொழித் திணைக்களத்தில் வாய்மூலப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | - 04 |

(இதன்கீழ் இரண்டாம் மொழி சிங்களப் பாடத்திற்காக தமிழ் மொழிச் சான்றிதழும், இரண்டாம் மொழி தமிழ் பாடத்திற்காக சிங்கள மொழிச் சான்றிதழுக்காகவும் புள்ளி வழங்கப்படும்.)

**2. ஆங்கில மொழித் தேர்ச்சி** **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 2.1 பட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக தொடர்ந்திருத்தல் | - 15 |
| 2.2 பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | - 12 |
| 2.3 க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | - 10 |
| 2.4 க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் | - 08 |
| 2.5 பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 06 |
| 2.6 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சான்றிதழ் பத்திர பாடநெறி | - 04 |
| 2.7 க. பொ. த. (சா. த.) ஆங்கிலப் பாடத்திற்காக விசேட/ அதிஉயரிய சித்தி/ திறமைச் சித்தி | - 02 |

**3. தகவல் தொழில்நுட்ப அறிவு** **உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15**

| | |
|---|---|
| 3.1 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் | - 15 |
| 3.2 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் | - 12 |
| 3.3 பட்டதிற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தைப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | - 10 |
| 3.4 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 08 |
| 3.5 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி (ஆறு மாதத்தைவிட மேற்பட்ட) | - 06 |
| 3.6 தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (ஆறு மாதங்கள் வரை) | - 04 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

**பகுதி II - செயன்முறை பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

| | |
|---|---|
| 1. பரிசோதனைச் சபையினால் பாடத்துக்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் விரிவுரையை நடாத்துவதற்காக விரிவுரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் | - 25 |
| 2. இக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய உரையை பரிசோதனைச் சபைக்கு முன்னால் நடாத்துதல் | - 25 |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 50** |

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

| |
|---|
| |

*(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)*

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016)

## Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Teacher Educators Service - 2015 (2016)

*(வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இரண்டு பிரதிகளைச் சமர்ப்பிக்கவும்.)*

*பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :*
*சிங்களம் - 2*
*தமிழ் - 3*
*ஆங்கிலம் - 4*

*(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)*

*விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் குறியீட்டு இலக்கத்தினைக் கீழே குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடவும். (வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 8 வகுதிகளுக்கமைய)*

| தொடர் இலக்கம் | பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : GUNAWARDENA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 அலுவலக தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.6 பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1

*(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)*

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. 5.1 இன வகை :

சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையவர் - 5

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

5.2 திருமணமாகாதவர்/ திருமணமானவர் :
திருமணமாகாதவர்-1
திருமணமானவர்-2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

5.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.4 2016.07.29 ஆந் திகதியன்று வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. கல்வித் தகைமை :

(அ) (i) பட்டம் அல்லது ஏனைய தகைமை பெற்ற திகதி :----.
(செல்லுபடியாகும் திகதி)
(ii) பட்டம்/ ஏனைய தகைமைகள் (பெயர்) :----.
(iii) தொடர்ந்த பிரதான பாடங்கள் :----.
(iv) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(v) வெளிவாரி/ உள்வாரி :----.

(ஆ) (i) பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தியடைந்த திகதி :----.
(ii) தொடர்ந்த பாடங்கள் :----.
(iii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(இ) 4(i) இல் குறிப்பிடப்பட்டதன்கீழ் விண்ணப்பிப்பதாயின்,

(i) குறிப்பில் காட்டப்பட்டுள்ள பாட இலக்கம் :----.
(ii) குறிப்பில் காட்டப்பட்டுள்ள தகைமைக்குரிய இலக்கம் :----.

7. (i) ஆசிரியராக முதலில் அரச சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(ii) அவ்வாசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ள பாடம் :----.
(iii) தற்போது சேவையாற்றும் கல்வி வலயம் :----.
(iv) 2016.07.29 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. (i) ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆண்டு :----.
(ii) தேசிய கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரியின் பெயர் :----.
(iii) ஆசிரியர் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
(iv) பயிற்சி பெற்ற பாடத்துறை :----.
(v) பயிற்சிக்குரிய பாடத்திற்கு ஆசிரியர் நியமனம் பெற்ற திகதி :----.
(vi) அந்நியமனத் திகதி தொடக்கம் 2016.07.29 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. தாங்கள் தற்போது வகிக்கும் பதவியின் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

10. தாங்கள் அரச சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமை பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மொழியைக் குறிப்பிடவும் :----.

11. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சரியாக இங்கு ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தாங்கள் வைத்துக்கொள்ளவும்) |

12. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானது என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ............................ மற்றும் .......................... ஆந் திகதி கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுவதாகக் குறிப்பிடுவதுடன் இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவன் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது எனது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும் அல்லது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குகிறேன். நான் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் பொருத்தமற்றவன் எனத் தெரியவரின் பதவியிலிருந்து நீக்கவும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் வண./திரு./திருமதி/செல்வி ................................... எனது கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றுவதாக இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
அதிபரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இங்கு பதிக்கவும்.).

திகதி :----.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் வண./திரு. திருமதி/செல்வி ................................... எனது வலயத்தில் ................ ................ சேவையாற்றும் ஆசிரியர் என்றும் இலக்கம் 1-10 வரையான வாசகங்களில் குறிப்பிட்ட விபரங்கள் அலுவலகத்தில் உள்ள அவரின் சுயவிபரக் கோவைக்கமைய சரியானது என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளர்/
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்.).

திகதி :----.

7-210/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரலை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.–*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 01.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.06.2016 |
| | | வெள்ளி | 08.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.06.2016 |
| | | வெள்ளி | 15.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.07.2016 |
| | | வெள்ளி | 22.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.07.2016 |
| | | வெள்ளி | 29.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.07.2016 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2016 |
| | | வெள்ளி | 12.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2016 |
| | | வெள்ளி | 19.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2016 |
| | | வெள்ளி | 26.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2016 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2016 |
| | | வெள்ளி | 09.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2016 |
| | | வியாழன் | 15.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2016 |
| | | வெள்ளி | 23.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2016 |
| | | வெள்ளி | 30.09.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.09.2016 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*